05th
NOVEMBER
2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 56 | பக்கங்கள் - 16 | editor.uthayam@gmail.com

## ஆசிரியர் தலையங்கம்

### சமூகத்தின் இருப்புக்காக சிந்தித்து வாக்களிப்போம்

இன்னும் சில தினங்களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

04ம் பக்கம்பார்க்க...



# அமெரிக்காவை ஆளப் போவது யார்?

## கமலா ஹாரிஸா? டொனால்ட் டிரம்பா?

## நாளை மாலைக்குள் இறுதி முடிவு!

முழு உலகமும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் நாளை புதன்கிழமை மாலை வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை நேரப்படி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஆரம்பமான வாக்குப் பதிவு நாளை முற்பகல் 11.30 மணியளவில் நிறைவுக்கு வரும்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த துணை

02 >>>



## பார்வையற்ற ஹாபிஸ் சிறுவனை கௌரவித்த சவூதி தூதுவர்



அல் குர்ஆனை முழுமையாக மனனமிட்டு ஹாபிஸாகிய காத்தான் குடியைச் சேர்ந்த முக்பில் சினான் என்ற கண்

02 >>>

## தேசிய கட்சிகளின் கைப்பொம்மைகளால் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அழிக்க சதி

### றிஷாத் பதியுதீன் ஆதங்கம்!

முஸ்லிம் தலைமைகளை அரசியலிலிருந்து ஓரங்கட்டும் சதி முயற்சிகளிலிருந்து சமூகம் விழிப்படைய வேண்டும் என அகில

04ம் பக்கம்பார்க்க...



## ஐந்து வருடங்களில் வறுமையை ஒழிப்பது அரசின் பிரதான இலக்கு

### ஜனாதிபதி அநுர கருத்து!

அடுத்த ஐந்து வருடங்களில் கிராமிய மக்களின்

02 >>>



## பழைய முறையிலேயே ஹஜ் ஏற்பாடுகள்

### அமைச்சர் விஜித ஹேரத் அங்கீகாரம்

### முஸ்லிம் திணைக்கள பணிப்பாளர் நவாஸ்



புனித ஹஜ் ஏற்பாடுகளை பழைய முறையிலே மேற்கொள்வதற்கு ஹஜ் விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் விஜித

02ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதி அநுர மீது மக்கள் நம்பிக்கை இழப்பு!

### சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு!

ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க கூறியதையும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க என்ன செய்கிறார் என்பதையும் மக்கள் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளை குறைப்பேன் என அவர் கூறினாலும்

05ம் பக்கம்பார்க்க...





கொழும்பின் சக்தி நீதான்!
பாராளுமன்றத்தில்..
எங்கள் குரலும் நீதான்!
முஜிபுர் றஹ்மான்
X 12



அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

## அமெரிக்காவை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஜனநாயகக் கட்சி சார்பிலும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் குடியரசுக் கட்சி சார்பிலும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்புகளில் டிரம்ப்பை கமலா ஹாரிஸ் சிறிய வித்தியாசத்தில் முந்திவந்தார். இருந்தாலும், கடைசி நேரத்தில் இருவருக்கும் இடையிலான போட்டி மிகவும் கடுமையாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அடுத்த ஜனாதிபதி யார் என்பதை முடிவு செய்யும் போர்க்கள மாகாணங்களில் (இரண்டு முக்கிய கட்சிகளில் எந்தக் கட்சிக்கு வேண்டுமானாலும் வாக்களிக்கக்கூடிய மாகாணங்கள்) டிரம்ப்புக்கான செல்வாக்கு அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது, டிரம்ப்பின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்கும் என்று கூறப்பட்டாலும், கருத்துக் கணிப்புகளில் இரு வேட்பாளர்களுக்கும் இடையிலான வேறுபாடு போதிய அளவில் இல்லை என்பதால் அவற்றை வைத்து வெற்றியாளரை இப்போதே ஊகிக்க முடியாது என்றும் எச்சரிக்கப்படுகிறது.

முடிவு எப்போது தெரியும்?

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் வெளியிடும் விதம் மிகவும் சிக்கல் நிறைந்தாக உள்ளது.

அமெரிக்காவின் ஒவ்வொரு மாகாணங்களும் வாக்குகளை எண்ணுவதற்கு வெவ்வேறு விதிமுறைகளும் நடைமுறைகளைகளும் பின்பற்றப்படுகின்றன. இதன் காரணமாக, எல்லா மாகாணங்களிலிருந்தும் தேர்தல் முடிவுகள் ஒரே நேரத்தில் வெளியிடப்படுவதில்லை.

பொதுவாக, தேர்தல் முடிந்த சில மணி நேரத்திலேயே முடிவுகள் வெளியாகி அடுத்த ஜனாதிபதி யார் என்ற விவரம் தெரிந்துவிடும். சில நேரங்களில் முடிவுகளைத் தெரிந்துகொள்ள மறுநாள் வரை காத்திருக்க வேண்டியிருக்கும்.

தற்போது நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் முதல்கட்ட வாக்குப் பதிவு (இலங்கை நேரப்படி) புதன்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு நிறைவடையும். இறுதிக்கட்ட வாக்கெடுப்பு (இலங்கை நேரப்படி) புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நிறைவடையும். அதற்குப் பிறகுதான் தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் யாருக்கு வேண்டுமானாலும் வாக்களிக்கலாம் என்ற சூழலைக் கொண்ட போர்க்கள மாகாணங்களில் டிரம்ப்புக்கும் கமலா ஹாரிஸுக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதால் தேர்தல் முடிவுகளைத் தெரிந்துகொள்ள வழக்கத்தைவிட அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## பார்வையற்ற...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

பார்வையற்ற சிறுவனுக்கு சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கௌரவம் வழங்கினார்.

கொழும்பிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்துக்கு இச் சிறுவனை இன்று வரவழைத்து பரிசுப் பொதிகளையும் வழங்கி பார்வையற்ற இச் சிறுவனின் திறமையை பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

## ஐந்து...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

வறுமையை இல்லாதொழித்து கிராமிய மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துடன் இன்று (05) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அந்த வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவு மிகவும் அவசியம். அரச அதிகாரிகளின் அனுபவமானது அதற்கு பெரும் உறுதுணையாக இருக்கிறது.

அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் அரச சேவைகள் செயற்படும் விதத்திற்கும் இடையில் சில இடைவெளி காணப்படுவதாகவும், நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு இதுவரையில் அரச நிர்வாகம் செயற்பட்டு வந்த விதத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

நாட்டில் மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது அரசாங்கத்தின் முக்கிய பணி எனவும், மோசடி மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் திட்டங்களை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், அரச சேவையில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது, அரச உத்தியோகத்தர்களுக்கு சுதந்திரமாக செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதேச அபிவிருத்திக்காக அரச அதிகாரிகளுக்கு விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. மக்கள் சேவைகளை குறைக்காமல் அரச சேவையில் மேற்கொள்ளப்படும் தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் மகேஷ் கம்மன்பில, செயலாளர் ஜயவீர பெர்னாண்டோ உட்பட குழு உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## பழைய...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஹேரத் அங்கீகாரம் அளித்திருப்பதாக முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ் நவாஸ் தெரிவித்தார்.

ஏற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால், உடனடியாக அவற்றை செய்ய முற்பட்டால் ஹஜ் ஏற்பாடுகளை சிறப்பாக செய்ய முடியாமல் போகலாம். எனவே தான் அமைச்சர் ஹஜ் ஏற்பாடுகளை பழைய முறையிலேயே செய்யுமாறு பணிப்புரை வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

88 முகவர் நிலையங்களுக்கு 3500 ஹஜ் கோட்டா பகிர்ந்து அளிக்கப்பட உள்ளது. இதற்காக ஐந்து பேர் கொண்ட தேர்வு குழு ஒன்று நியமிக்கப்பட்டு தகுதியானவர்களை தெரிவு செய்துள்ளோம். முன்னாள் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வை. எல். எம். நவவி தலைமையிலான தேர்வு குழு இந்த 88 முகவர்களையும் தெரிவு செய்திருக்கின்றார்கள்.

இவர்களில் ஐவர் நிர்வாக சேவையிலுள்ள உத்தியோகத்தர்களும் ஒருவர் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் கணக்காளரும் ஆவார். இவர்கள் உள்ளடங்கலான குழுவினாலேயே இந்த தேர்வு நடாத்தப்பட்டுள்ளது என முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இம்முறை 75,65,55,15 என்ற அடிப்படையில் தான் வீசாக்கள் பகிர்ந்தளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

அசுர வேகத்தில் வலம் வந்து கொண்டிருக்கும் உதயம் பத்திரிகையில் உங்களது நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரிக்க வேண்டுமாயின் தொடர்புகளுக்கு:
070 239 7210






# நாட்டில் உருவாகியுள்ள அரசியல் கலாசாரத்துக்கு ஏற்றதான பாராளுமன்ற கலாசாரத்துக்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்ய வேண்டியது மக்களின் பொறுப்பாகும்

## - பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய -







(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

எமது நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசியல் மாற்றத்துக்குப் பொருத்தமான புதிய கலாசாரத்தைக் கொண்ட புதிய பாராளுமன்றத்தை உருவாக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

இதற்கான சந்தர்ப்பம் இப்போது மக்களுக்கு கிடைத்துள்ளது.நாட்டுக்கான கொள்கை உருவாக்கம்,சட்ட உருவாக்கம் மற்றும் நிதி நிர்வாகம் ஆகிய தேசமொன்றுக்கான பிரதானமான செயல்பாடுகள் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதற்கு தகுதியான பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டியது மக்களின் கடமையும் பொறுப்புமாகும் என பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மற்றும் பாணந்துறை தேர்தல் தொகுதிகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றும்போதே பிரதமர் ஹரினி அமரசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யும் பிரதிநிதிகள் மக்களுக்கு பொறுப்புக் கூருபவர்களாக இருத்தல் வேண்டும்.நாட்டின் கொள்கை உருவாக்கம், சட்ட உருவாக்கம் மற்றும் நிதி பரிபாலனம் ஆகிய பிரதானமான மூன்று விடயங்களும் உருவாக்கம் பெறும் இடமாக பாராளுமன்றம் விளங்குகின்றது. இந்த மூன்று விடயங்களுக்கும் மதிப்பளிப்பவர்களையே மக்கள் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும். குறைந்தது ஊழல் மற்றும் மோசடி பேர்வழிகளத் தவிர்த்தல் வேண்டும்.இருந்த 225 பேர் தொடர்பில் மக்களுக்கு நன்கு தெரியும்.இவர்கள் மக்களின் வாக்குகளால்தான் பாராளுமன்றம் போனார்கள்.

எமது அரசியல் கலாசாரத்தில் திருடர்களையும் பாராளுமன்றம் அனுப்பும் நிலைதான் இருந்தது.

மக்களுக்காக சேவையாற்றுபவர்களை தெரிவு செய்வதற்கு குறைந்தது அவர்கள் கொள்கைக்கு மதிப்பளிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.சட்டத்தை உருவாக்குபவர் சட்டத்துக்கு மதிப்பளிப்பவராக இருத்தல் வேண்டும்.இவ்வாறு இல்லாதவருக்கு சட்டத்தை உருவாக்க பொறுப்புக் கொடுக்க முடியாது.ஊழல் மோசடி பேர்வழிகளுக்கு நாட்டின் நிதி பரிபாலனத்தை வழங்க முடியாது எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

எமது நாட்டில் அரசியல் புது யுகமொன்றை உருவாக்க கடந்த செப்தம்பர் இருபத்தோராம் திகதி தேசிய மக்கள் சக்திக்கு 05ம் பக்கம்பார்க்க...









www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 NOVEMBER 05 - TUESDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## சமூகத்தின் இருப்புக்காக சிந்தித்து வாக்களிப்போம்

இன்னும் சில தினங்களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. முஸ்லிம் பிரதிநிதித்துவம் இம்முறை குறைந்து விடுமோ என, கவலைப்படுமளவு முஸ்லிம் தரப்பிலிருந்து எதிரும், புதிருமான பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ளன.

புதியவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும், கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் இருந்தவர்கள் தோற்கடிக்கப்பட வேண்டுமென்ற, பிரச்சாரங்களும் தீவிரம் பெற்றுள்ளன.

இந்தப் பிரச்சாரமானது, நமது சமூகத்திற்கு ஆபத்தை தேடி தந்துவிடக் கூடாது.
கடந்த காலங்களில் ஊழல் புரிந்தவர்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பத் தேவையில்லை.

ஆனால் அறிவும், அனுபவமும், ராஜதந்திர செயற்பாடும் கொண்ட கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் இருந்த, முஸ்லிம் அரசியல்வாதிகளை பாராளுமன்றத்திற்கு மீண்டும் அனுப்பவும் நாம் தவறக் கூடாது.

தாம் விரும்பிய கட்சிக்கும், தாம் விரும்பிய வேட்பாளரை தெரிவு செய்யும் உரிமையும் சகல பிரஜைகளுக்கும் உண்டு.

எனினும் நமது நாடு, நமது சமூகம் என சிந்தித்து வாக்களிப்பது குடிமக்களாகிய நமது பொறுப்பாகும்.

## பிராந்திய நிருபர்களுக்கான திறந்த விண்ணப்பம்

பத்திரிகைத் துறையில் முன்னணி வளர்ச்சியை எட்டியிருக்கும் உதயம் பத்திரிகைக்கு பிராந்திய நிருபர்கள், சுயாதீன ஊடகவியலாளர்களுக்கான உத்தியோகபூர்வ அங்கத்துவம் வழங்கப்படவுள்ளது.
எனவே, ஆர்வமுள்ளவர்கள் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது வட்ஸ்அப் ஊடாக தங்களது சுயவிபரக் கோவையை எதிர்வரும் ஜூலை 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல்:
moonmedia178@gmail.com

Whatsapp / Call:
070 239 7210

### தேசிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உலமாக் குழுவின் ஏற்பாட்டில், ”சிறுபான்மை பிரதிநிதித்துவமும் உலமாக்களின் பங்களிப்பும்” என்ற கருப்பொருளில், வன்னி மாவட்ட உலமாக்களுக்கான மாநாடு, மன்னாரில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் மேற்கண்டவாறு கூறினார்.


தொடர்ந்து பேசிய அவர்,

”தேசிய மக்கள் சக்தி வென்றுவிட்டது என்பதற்காக, முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை இல்லாதொழிக்க விரும்புகின்றீர்ககளா? பாராளுமன்ற அரசியலில், சமூகங்களுக்கென்று தனித்தனி பிரதிநிதித்துவங்கள் அவசியம். தேசிய அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளமைக்காக, சமூகங்களின் பிரதிநிதித்துவங்களை இல்லாமற் செய்ய இயலாது. எம்மத்தியில் உள்ள சிலர் இவ்வேலைகளைச் செய்வதற்கு துணிந்துள்ளனர். இந்த சதிகளுக்கு துணைபோயுள்ள நமது சகோதரர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உலமாக்களுக்கும் உள்ளது.

பிரதிநிதித்துவங்கள் இல்லாத சமூகங்கள், திசை தவறும் ஆபத்துக்களை எதிர்கொள்ளலாம். முறையான தலைமைத்துவங்கள் இருந்தபோதும், உணர்ச்சி, எழுச்சிகள் ஏற்பட்டதால், தமிழ் இளைஞர்கள் தவறான வழி சென்ற வரலாறு நமது நாட்டில் உள்ளது. இதனால், ஏற்பட்ட யுத்தம் சகல சமூகங்களையுமே பாதித்திருந்தன. இதுபோன்ற எழுச்சியை, இப்போது ஏற்பட்டுள்ள மாற்றமும் ஏற்படுத்துமோ என நாங்கள் அஞ்சுகின்றோம்.

புத்தளத்தில், ஒரு முஸ்லிம் எம்.பி. வரக்கூடாதென்று முஸ்லிம்களையே சதி செய்யத் தூண்டியுள்ளனர். கொழும்பில் முஜிபுர் ரஹ்மான் வரக்கூடாதா? கண்டியில், ரவூப் ஹக்கீம் வென்றால் இவர்களுக்கென்ன பிரச்சினை. வன்னியில், எனது தலைமைத்துவத்தை வேரறுக்கவும் வியூகங்கள் வகுக்கப்படுகின்றன.

தேசிய கட்சிகளின் கைப்பொம்மைகளாக இருக்கப்போகும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது. சமூகத்துக்கு ஏதாவது கெடுதிகள் அல்லது ஆபத்துக்கள் ஏற்பட்டால், எங்களால்தான் பேச முடியும். எனவே, எமக்கான பிரதிநிதித்துவங்களை நாமே வென்றெடுக்க வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.



# சக வாழ்வினை வளர்ப்பதில் பள்ளிவாசல் நிர்வாக சபை பங்கு முக்கியமானது

**முஸ்லிம் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ்!**



முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குருநாகல் மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர்களுக்கான ஒருநாள் செயலமர்வு நவம்பர் 03 ஆம் திகதி பரகஹதெனிய ஜாமிஉல் அன்வர் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம். எஸ். எம். நவாஸ் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக மாவத்தகம பிரதேச செயலாளர் எம். எஸ் ஜனாக அவர்களுடன் இதில் உதவிப் பணிப்பாளர் எம். எஸ். அலா அஹ்மட், வக்பு சபையின் பதில் செயலாளர் எம். என். ரோசன், எம். ஐ. முனீர், ஏ.எம். ரிஸ்மி, உதவிப் பணிப்பாளர் என். நிலூபர் ஆகிய அதிகாரிகள் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

அத்துடன் மாவட்ட கலாசார உத்தியோகஸ்தர் இஹ்சான் மரைக்கார், இக் கருத்தரங்கில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகள், இலங்கை வக்பு சபை மற்றும் வக்பு நியாய சபை பற்றிய அறிமுகம், பள்ளிவாசல் ஒரு சமூக மையம், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் சேவைகள் மற்றும் அதன் செயற்பாடுகள், குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பொது பாடத்திட்ட அறிமுகம் ஆகிய தலைப்புகளில் விளக்கங்கள் இங்கு வழங்கப்பட்டன.

இக்கருத்தரங்கில் குருநாகல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அவரால் அரிசியைக் கூட முறையாக வழங்க முடியவில்லை. தேங்காய்களுக்கு கூட வரிசைகளும் காணப்படுவதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு காணப்படும் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க முடியும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. எரிபொருள் விலை, மின்சாரக் கட்டணம், வரிகள் குறைப்போம் என்றும் தெரிவித்தார். ஆனால் அவை எதுவும் நடக்கவில்லை என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு கோட்டை, ஒபேசேகரபுர தொகுதி மக்களுடனான சந்திப்பொன்று இன்றைய (04) தினம் ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் விலை சூத்திரம் தவறு என கருத்து தெரிவித்த அனுரகுமார திஸாநாயக்க, இன்று எரிபொருள் விலை சூத்திரத்தின் அடிமையாக மாறியுள்ளார். எரிபொருள் விலை குறைப்பதாக கூறிக் கொண்டு செல்வந்த உயர் வர்க்கத்தினர் பயன்படுத்தும் வாகனங்களுக்கு மட்டும் தேவைப்படும் எரிபொருளுக்கான விலையை மட்டுமே குறைத்துள்ளனர். சாதாரண மக்கள் பயன்படுத்தும் 92 ஒக்டேன் எரிபொருளுக்கான விலை குறைக்கப்படவில்லை என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கடவுச்சீட்டுக்கு காணப்படும் வரிசைக்கு தீர்வைத் தருவோம் என்று கூறினாலும், இன்று கடவுச்சீட்டுக்கான வரிசை அதிகரித்து வருகிறது. இவர்கள் நாட்டு மக்களை நாளுக்கு நாள் ஏமாற்றி வருகின்றார்கள். அரச உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு 6 மாதங்களு ஒரு தடவை சம்பளத்தை அதிகரிப்பதாக கூறினர், என்றாலும் இதற்கான எந்த நடவடிக்கையையும் இதுவரை மேற்கொண்டபாடில்லை. இந்த இரட்டை நிலைப்பாடான அரசியலால் முழு நாடுமே ஏமாந்துபோயிருப்பதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அடிமையாக நாம் செயல்பட மாட்டோம் என வாய்கிழிய பேசிய மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் அடிமையாக மாறி சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆடிவருகின்றனர். தற்போதைய ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தின் அடிமையாக செயற்பட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி அவ்வாறு நடந்து கொள்ளாது. இதற்கான வேலைத்திட்டம் எம்மிடம் காணப்படுகின்றன. ஆட்சிக்கு வந்தவுடன் இந்த ஒப்பந்தம் மாற்றப்படும் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## நாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வழங்கிய ஆணை மிகவும் உறுதியான தீர்மானமாகும்.

இந்த மாற்றத்தை உருவாக்க அனைவரும் அர்ப்பணத்துடன் செயல்பட்டனர்.எமது மக்களுக்கு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றம் என்ற உணர்வு இருக்கவில்லை.இப்போதுதான் மக்களின் சகோதர ஜனாதிபதி ஒருவர் இருக்கின்றார் என்ற உணர்வு மக்களிடம் காணப்படுகின்றது.இந்த மாற்றம் இருபத்தோராம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றம் என்றே நான் நம்புகிறேன்.


தேசிய மக்கள் சக்தி என்ற தேசிய வேலைத் திட்டத்தை கட்டியெலுப்ப மக்கள் காட்டிய ஆர்வமும் அர்ப்பணிப்புகளும் மகத்தானது.இதனால்தான் எமது கோட்பாட்டை நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்க முடிந்தது.இப்போது நாம் ஆரம்பித்துள்ளது பயணத்தின் தொடக்கம் மாத்திரமாகும். ”வளமான தேசம் அழகான வாழ்க்கை” என்ற எண்ணக்கருவை முன்னெடுக்க உலகிலேயே சிறிய அமைச்சரவையான மூன்று உறுப்பினர்களுடன் ஆரம்ப பணியை தொடங்கியுள்ளோம்.தேசத்தின் நிலையான வெற்றிக்காக அர்ப்பணத்துடன் செயல்படுவோம் எனவும் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட வேட்பாளர்களான சட்டத்தரணி நிலந்தி கொட்டகச்சி, சந்திம ஹெட்டியாரச்சி மற்றும் களுத்துறை தொகுதி வேட்பாளர்களும் உரையாற்றினர்.



nazu டிராவல்ஸ் ஏற்பாடு செய்திருந்த ரமழான் மாத கேள்வி பதில் நிகழ்ச்சியில் முதல் பரிசாக முழு உம்ராஹ் யாத்திரையை வென்றவர்கள் தமது விருப்பத்துக்கு இணங்க உம்ராஹ் யாத்திரையை சிறப்பான முறையில் கடந்த 27.10.2024 ஞாயிறு அன்று நிறைவு செய்தனர்.

ரமழான் மாதம் 30 நாட்கள் கேட்ட கேள்விகள் அனைத்துக்கும் சரியான முறையில் பதில் கூறி குலுக்கள் முறையில் தெரிவு செய்யப்பட்டு சிறப்பான முறையில் தங்கள் புனித உம்ராஹ் யாத்திரையை நிறைவு செய்தகவும் அதிஷ்டசாலிகள் கருத்து தெரிவித்தனர்.




# எமது வாக்குகள் சிதறடிக்கப்படுவதாலேயே சிறுபான்மையின பிரதிநிதித்துவத்தை இழக்கிறோம்

(பீ.எம்.முக்தார்)

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அரசியல் சிறுபான்மை இன மக்களின் வாக்குகளை சிதறடிக்கச் செய்யும் சதி வலையாலும் நான் பாராளுமன்றம் செல்லும் வாய்ப்பு இழக்கப்பட்டது. அந்தத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் நமது கட்சியில் இருந்து இரண்டு உறுப்பினர்கள் தெளிவான நிலையில் நான் 54137 விருப்பு வாக்குகளை பெற்று 642 வாக்கு வித்தியாசத்திலேயே மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டேன். என்று மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் நடக்கவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் களுத்துறை மாவட்ட ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளருமான இப்திகார் ஜெமீல் கூறினார்.

தேர்தல் வெற்றி குறித்து ஊடகவியலாளருடனான நேர்காணல் ஒன்றின் போது இஸ்திகார் ஜமீல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தொடர்ந்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் வழங்கிய செவ்வி வருமாறு,

**கேள்வி: உங்கள் அரசியல் பிரவேசம் எவ்வாறு அமைந்தது?**

**பதில்:** பேருவளை வரலாற்றில் மிகவும் கௌரவமான அரசியல் பின்னணியை கொண்ட குடும்பத்தில் பிறந்த நான் சிறுவயதில் இருந்தே சமூக அக்கறையோடு அரசியலிலும் அதீத நாட்டம் கொண்டவனாக இருந்தேன் இதனால் படிக்கும் காலத்திலேயே சமூக சேவைகளில் ஈடுபட்டு வந்தேன். இந்தப் பணிகளோடு என்னுள் பதிந்திருந்த அரசியல் ஆர்வமும் சேர்ந்து 2004 ஆம் ஆண்டில் அரசியலில் அரசியலில் காலடி எடுத்து வைத்தேன் முதல் முதலாக பேருவளை நகர சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன் நகர சபை உப தலைவராக பதவி வகித்து மக்களுக்கு என்னால் முடியுமான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தேன்.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். அப்போது மேல் மாகாண சபைக்கு வரும் எமது சமூகத்தை பாதிக்கும் மசோதாக்களை மாற்றியமைக்கச் செய்வதில் முன் நின்று உழைத்துள்ளேன். எனக்கு கிடைக்கும் நிதி ஒதுக்கீடுகளை இனம்,மதம் பாராது எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதில் பணியாற்றியுள்ளேன். குறிப்பாக எமது மாவட்டத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் முஸ்லிம்,தமிழ் கிராமங்களுக்கும் அபிவிருத்தி பணிகளில் அர்ப்பணிப்புச் செய்துள்ளேன்.மேல் மாகாண சபை அமர்வுகளில் எமது சமூக நலங்களுக்காக எப்போதும் எனது குரல் ஓங்கி ஒலித்ததை அப்போது சபையில் இருந்த அங்கத்தவர்கள் பலரும் நன்கு அறிவார்கள்.

**கேள்வி: நடக்கவிருக்கும் தேர்தலில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உள்ளதா?**

**பதில்:** ஆம் வெற்றி நிச்சயம். ஊழல்,மோசடி,இலஞ்சம் உள்ளிட்ட சாக்கடை அரசியல் என்னிடம் அறவே இல்லை. பல சந்தர்ப்பங்களில் மக்கள் சேவைக்காக எனது சொந்த நிதியை கூட பிரயோகிக்க தவறாத தூ ய்மையான அரசியலே என்னிடம் குடிகொண்டுள்ளதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

இவற்றுக்கு மேலாக இப்போது அரசியலில் ஈடுபடுவோருள் நான் மிகவும் பழுத்த அனுபவம் மிக்கவன். சுத்தமான கரங்களைக் கொண்டவன் இதனை எமது மக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள் அதனால் எனது வெற்றி வாய்ப்பில் எனக்கு நல்ல நம்பிக்கை உள்ளது.

**கேள்வி: கடந்த காலங்களில் பேருவளை தேர்தல் தொகுதியும் பல முஸ்லிம் கிராமங்களும் இனவாத கும்பல்களால் கடுமையாக பாதிப்புக்குள்ளானபோது சமூகத்தை காப்பாற்ற உங்கள் வகிபாகம் எப்படி அமைந்தது?**

**பதில்:** கலவரம் மேலும் பரவாது இருப்பதற்காக உரிய இடங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி பாதுகாப்பை பலப்படுத்துவதில் என்னால் இயன்ற பங்களிப்புகளை செய்துள்ளேன்.

பௌத்த மதகுருமார்களுடன் தொடர்பு கொண்டு கலவரங்களை ஆசுவாசப்படுத்த செய்வதிலும் என்னாலான முயற்சிகளை செய்யவும் தவறவில்லை. பெரும்பான்மை இன மக்களின் நல் அபிமானத்தை பெற்றதனால் தான் சுமார் 54 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளை என்னால் பெற முடிந்ததல்லவா?

மேற்படி கலவரங்களின் போது மட்டுமல்ல கொரோனாவின் போதும் பேருவளை அடக்கி முடக்கப்பட்ட வேலைகளிலும் ஊரையும் சமூகத்தையும் காப்பாற்றவும் பலருடன் இணைந்து காரிய மாற்றியதையும் நினைவூட்ட விரும்புகிறேன். ஜனாஸா எரிப்புக்கு கூட எமது மக்களை அணிதிரட்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைச் செய்யவும் தயங்காது இடுபட்டு சமூகத்துக்கு துணிச்சலையும் ஊக்கத்தையும் ஊட்டியதையும் யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

இனவாதிகளால் அல்குர்ஆன் அவமதிக்கப்பட்ட போதும் அண்ணல் நபிகளார் இழிவுபடுத்தப்பட்ட நேரத்திலும் சம்பந்தப்பட்டோரை கண்டித்தும் தண்டிக்கும் படி கோரியும் எதிர்ப்பு காட்டி நின்றதையும் நினைவூட்டுகிறேன்.இஸ்ரேல் காசஸாவில் செய்யும் அராஜகத்தை நிறுத்த கோரி நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் பங்கு பற்றினேன்.

**கேள்வி: மாகாண சபை உறுப்பினராக இருந்தபோது குறிப்பிடத்தக்க பணிகள் புரிந்ததாக கூறினீர்கள் அவை எத்தகைய பணிகள்?**

**பதில்:** சுமார் 40-50 கோடி ரூபாய் அளவில் பணிகள் மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் சென்றடைந்துள்ளன. அவை கல்வி,பாடசாலை,சுகாதாரம்,வீதி அபிவிருத்தி,புணரமைப்பு,சகல சமய வழிபாட்டுத்தலங்கள் என்றெல்லாம் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பாராளுமன்ற பிரவேசம் கிடைக்காத போதும் கம்பரலிய போன்ற திட்டங்களுக்கான நிதியையும் பெற்று மாவட்டத்தின் பலவீதிகள் புனரமைப்புச் செய்து கொடுக்கவும் உதவியுள்ளேன்.

**கேள்வி: மாகாண சபை மூலமும் மற்றும் பதவி இல்லாத போதும் இவ்வளவு சேவைகளை செய்துள்ள நீங்கள் பாராளுமன்றம் சென்றால் என்னென்ன பணிகள் செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?**

**பதில்:** எனக்கு ஒத்துக்கப்படும் நிதியில் ஒரு சதவீதம் உரிய தேவைப்படும் இடங்களை சென்றடைய செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பேன். எனக்கு வரும் நிதி அதனை செலவு செய்த தொகை எல்லாம் ஊடகங்கள் வாயிலாக தெரியப்படுத்தவும் செய்வேன் அப்போது கையாடல்,ஊழல் மோசடிக்கு பேச்சை இருக்காது. எனது பகுதியில் உள்ளாசப் பயணத்துறை,மீன் பிடி,இரத்தினக் கல் வர்த்தக மேம்பாட்டுக்கும் திட்டங்கள் வகுத்துள்ளேன். கல்வித்துறை உயர்வுக்கும் எனது உத்தேசத்தில் உள்ளது. இவற்றுக்குப் புறம்பாக எமது மாவட்டத்தில் உள்ள தோட்டப்புரம்,பின்தங்கிய கிராமங்கள் போன்றவற்றின் வளர்ச்சிக்கும் உதவுவது நமது எதிர்காலப் பணிகளில் அடங்கும்.

**கேள்வி: எமது வாக்காளர் பெருமக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில்:** எமது மாவட்டத்தில் சுமார் 135000 தமிழ் பேசும் சிறுபான்மை வாக்காளர்கள் உள்ளன இந்த வாக்குகள் யாவும் சிதறாமல் ஒரு முகப்படுத்தப்பட்டு ஒரே கட்சிக்கு அளிக்கப்பட்டு விருப்பு வாக்கினை சிறுபான்மை உறுப்பினர்களுக்கு அளி க்கப்படுமானால் இரண்டு சிறுபான்மைப் பிரதிநிதிகள் பெறலாம்.எனவே உங்கள் வாக்குகளை தொலைபேசி சின்னத்திற்கு அளித்து விருப்பத்தெரிவாக எனது 10 ஆம் இலக்கத்தின் மீது புள்ளியிடுங்கள்.



# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

"(எத்தகைய இன்னல்களையும் பொறுமையுடன்) சகித்துக்கொள்வார்கள். தொழுகையையும் கடைப்பிடித்தொழுகுவார்கள் நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து இரகசியமாகவும் பரகசியமாகவும் (நல்வழியில்) செலவும் செய்வார்கள். நன்மையை கொண்டே தீமையைத் தவிர்த்துவிடுவார்கள். இத்தகையோருக்கு மறுமையில் நல்ல இருப்பிடமுண்டு. (அதாவது நிலையான சுவனபதி கூலியாகக் கிடைக்கும்)" (21:22)

"மெய்யாகவே விசுவாசம் கொண்டிருப்பவர்கள் அவர்கள் தாம் (அவர்கள் முன்) அல்லாஹ்வின் திருநாமம் நினைவுகூறப்பட்டால், அவர்களுடைய இதயங்கள் திருப்தியடைந்துவிடுகின்றன. (ஏனென்றால்) அல்லாஹ்வின் திருநாமத்தை நினைவுகூறுவதால் (உண்மை விசுவாசிகளின்) இருதயங்கள் நிச்சயமாக திருப்தியடையும் என்பதை (நபியே நீர்) அறிந்துகொள்ளும்." (13:28)

"எவர்கள் விசுவாசம் கொண்டவர்களாக இருப்பதுடன், நற்காரியங்களையும் செய்து வருகிறார்களோ, அவர்களுக்கே நற்பாக்கியமும், நல்ல இருப்பிடமும் உண்டு" (13:29)

### ஒரு பெண்ணுக்கு ஒப்பாக வேண்டாம்

"(மனிதர்களே, உறுதிப்படுத்திய சத்தியத்தை முறித்து) நீங்கள் ஒரு பெண்ணுக்கு ஒப்பாகிவிட வேண்டாம். அவள் மிகக் கஷ்டப்பட்டு நூற்ற நூலைத் தானே (தரித்துத்) துண்டுதுண்டாக்கி விடுகிறாள். (அன்றி) ஒரு வகுப்பாரை விட மற்றொரு வகுப்பார் பலம் வாய்ந்தவர்களாகவும் உங்கள் சத்தியத்தை உங்களுக்கிடையில் காரணமாக்கி வைத்துக் கொள்ளாதீர்கள். இவ்விஷயத்தில் (நீங்கள் சரியாக நடக்கிறீர்களா? இல்லையா என்று) நிச்சயமாக அல்லாஹ் உங்களைச் சோதிக்கின்றான். தவிர நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருந்தவைகளையும் அவன் உங்களுக்குத் தெளிவாக விவரித்துக் காண்பிப்பான்" (16:92)

### பாவமும் பரிசுத்தமும்

"அல்லாஹ் நாடியிருந்தால் உங்கள் யாவரையும் ஒரே மார்க்கத்தைப் பின்பற்றும் சமுதாயத்தினராக ஆக்கியிருப்பான். எனினும் (அவன்) தான் நாடியவர்கள் (அவர்களின் பாவத்தின் காரணமாகத்) தவறான வழியிலேயே விட்டுவிடுகிறான். தான் நாடியவர்களை (அவர்களின் பரிசுத்தத் தன்மை காரணமாக) நேரான வழியில் செலுத்துகிறான். நீங்கள் செய்து கொண்டிருந்த செயல்களைப் பற்றி நிச்சயமாக நீங்கள் (மறுமையில்) கேட்கப்படுவீர்கள்" (16:93)

"நிச்சயமாக அல்லாஹ் (உங்களை) ஏவுகிறான். மானக்கேடான காரியங்கள், பாவம், அக்கிரமம் ஆகியவைகளிலிருந்து (உங்களை) அவன் தடைசெய்கிறான். (இவைகளை) நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கின்றான்" (16:90)

### சத்தியம் செய்தல்

"நீங்கள் அல்லாஹ்வின் பெயரால் செய்யும் உடன்படிக்கையைப் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வைச் சாட்சியாக வைத்துச் சத்தியம் செய்து அதனை உறுதிப்படுத்திய பின்னர் அந்தச் சத்தியத்தை நீங்கள் முறித்து விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய செயலை நன்கறிவான்" (16:91)

### கொடுக்கல் வாங்கலும் நட்பும் இராத நாள் வரும் முன்

"நபியே, விசுவாசங் கொண்ட என் அடியார்களுக்கு நீர் கூறும்! அவர்கள் தொழுகையைக் கடைப்பிடித்தொழுகவும் நாம் அவர்களுக்கு கொடுத்தவற்றிலிருந்து இரகசியமாகவும் பரகசியமாகவும் தானம் செய்யவும் கொடுக்கல் வாங்கலும், நட்பும் இராத நாள் வருவதற்கு முன்பதாகவே-(இவ்வாறு செய்து கொள்ளவும்)" (14:31)

"ஒவ்வோர் ஆத்மாவுக்கும் அது செய்த வினைக்குத் தக்க கூலியை அல்லாஹ் அளிப்பான். நிச்சயமாக கேள்விக் கணக்குக் கேட்பதில் அல்லாஹ் மிக்க சுறுசுறுப்பானவன்" (14:51)

"மனிதர்கள் எச்சரிக்கப்பட்டு வணக்கத்துக்குரியவன் ஒரே ஆண்டவன்தான் என்று அவர்கள் உறுதியாக அறிந்து கொள்வதற்கும், அறிவுடையோர்கள் நல்லுணர்ச்சி பெறுவதற்கும் (குர்ஆனாகிய) இது (அல்லாஹ்வின் கட்டளைகள் / பொதிந்த) ஓர் அறிக்கையாகும்." (14:52)

"தாங்களும் முஸ்லிம்களாக இருந்திருக்க வேண்டாமா? என்று நிராகரிப்போர் (மறுமையில்) பெரிதும் விரும்புவர்" (15:02)

# H ஸ்டுடியோ நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு!



உ ஸ்டுடியோ கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் தையல் கற்கை நெறியை பூர்த்தி செய்த முதல் மற்றும் இரண்டாம் கட்ட மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கும் நிகழ்வு கல்வி நிறுவனத்தின் தலைவர் ஹாஜரா பார்ஹட் தலைமையில் கொழும்பு டீஆஜஊஉ மண்டபத்தில் நடைபெற்றது.

இன் நிகழ்வில் அதிதிகளாக கிரேட்டிவ் டிரக்டர் ஒப் சட் ஜீசா ஜெமீல் மற்றும் டேலண்ட் ஹப் இயக்குனர் பாஸ்லியா ரமீஸ் ஆகியோரும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்க்கையும் பதக்கங்களையும் வழங்கி கௌரவித்தனர்.



மாவனல்லை கிருங்கதெனியவில் நடைப்பெற்று வந்த முறைசாரா கல்வி முறையின் ஆறு மாத கால தையல் பயிற்சி நெறியின் கண்காட்சியும்,சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் ,ஆசிரியை ஐன் இஸ்ஸடீன்அவர்களின் தலைமையில் பெலிகம்மன விகாரையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக பிரதேச கல்வி பணிப்பாளர் நிரோஷா பெர்னாண்டோ அவர்களும் ,விசேட அதிதியாக இளம் தொழிலதிபர் சஹீமுல்லா இக்பால் அவர்களும் கலந்து சிறப்பித்தனர் .

(பாரா தாஹீர்)






எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)




ஈரான் மீது இஸ்ரேல் ராணுவம் 100 க்கு மேற்பட்ட விமானங்கள் மூலம் அந்த பிராந்தியத்தில் ஊடுருவி மிகவும் வலிமையான தாக்குதலை நடத்தி இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவத்தின் தாக்குதலை ஈரான் மிகவும் சிறிய அளவிலான சேதாரத்தை மட்டுமே தங்கள் சந்தித்ததாக ஈரான் தெளிவாக தெரிவித்து இருக்கின்றது.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேலிய ராணுவம் சிரியா மற்றும் ஈராக் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதலை நடத்தி விட்டு பாதுகாப்புடன் திரும்பியது சர்வதேச அளவில் பேச்சு பொருளாக மாறி வருவதைக் காண கூடியதாக இருக்கிறது. இந்த தாக்குதலினுடாக இஸ்ரேலிய ராணுவம் இறையாண்மை கொண்ட ஒரு தேசத்தின் அனுமதி இல்லாமல் அந்த நாட்டின் வான் பரப்பில் பறந்து சென்று தாக்குதலை நடத்தி உள்ளதை குறித்து யாரும் இதுவரை கேள்வி கேட்க முடியாத நிலை காணப்படுகிறது.

இஸ்ரேல் தற்போதைய நிலையில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு சென்று வருவதை நாம் அவதானிக்க முடிகின்றது. காசாவில் மனித இன படுகொலைகளை தொடரும் பெஞ்சமின் நிதான்யாகு வின் அரசிற்கு தங்களை யாரும் எந்தவொரு நிலையிலும் கேள்வி கேட்க முடியாது என்கிற தைரியம் காரணமாக தான் இது போன்ற மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தி வருவதைக் காண முடிகிறது.

இஸ்ரேலிய ராணுவத்தின் இந்த தாக்குதலுக்கு பதில் தந்த ஈரானின் உச்சத் தலைவர் ஆயதுல்லா அலி காமனெயி இஸ்ரேலின் தாக்குதலுக்கு மிகவும் அளவான மறுமொழி கொடுத்துள்ளார். "உடனடியாக பதிலடி கொடுக்கப்படும்" என்று சவால் விடுவதைத் தவிர்த்த அவர், அதே சமயம் இஸ்ரேலின் தாக்குதலைக் குறைத்து மதிப்பிடவோ, மிகைப்படுத்தவோ கூடாது என்றும் கூறியிருக்கிறார். ஈரான் நாட்டின் இளைஞர்கள் எந்தவொரு தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும் என்றும், அதேநேரத்தில் இஸ்ரேலிய ராணுவம் ஈரானின் ராணுவம் மற்றும் நமது செயல்பாடுகள் குறித்து தப்பு கணக்கு போட்டுவிட்டார்கள் என்றும் அயாதுல்லாஹ் கொமேனி கூறினார். ஈரான் உச்சபட்ச தலைவரின் மட்டுப்படுத்தப்பட்ட பேச்சில் ஆயிரம் அர்த்தங்கள் இருப்பதை நாம் புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது.

அதே சமயம் இரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன், இந்தத் தாக்குதலுக்கு ஈரான் "தக்க பதிலடி கொடுக்கும்" என்று கூறினார். ஆனால் "ஈரான் போரை விரும்பவில்லை" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இஸ்ரேல் தாக்குதலில் குறைந்தது நான்கு ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக ஈரான் ஒப்புக் கொண்டுள்ளது.

அதேநேரத்தில் இந்தத் தாக்குதல் குறித்துப் பேசிய இஸ்ரேல் அதிபர் பெஞ்சமின் நெதன்யாகு, "ஈரான் ஒரு எளிய கொள்கையைப் புரிந்து கொள்ள வேண்டும். யார் எங்களைக் காயப்படுத்துகிறார்களோ, அவர்களை நாங்கள் காயப்படுத்துவோம்," என்று கூறினார். அதாவது உலகின் எந்த ஒரு பகுதியில் இருந்தாலும், எந்தவொரு நாடாக இருந்தாலும் நாங்கள் பழிவாங்கியே தீருவேன் என்றும் அவர் கூறினார்.பொதுவாக கடந்த சில நாட்களாக இஸ்ரேலிய ராணுவம் ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஈரான் தலைவர்களை படுகொலை செய்யும் போதெல்லாம் இந்த வசனத்தை தொடர்ந்து உச்சரிப்பு செய்து வருவதைக் நாம் காண கூடியதாக உள்ளது. இறையாண்மை கொண்ட எந்தவொரு நாடாக இருந்தாலும் எங்களுக்கு உள்ள தனி சட்டத்தின் மூலம் நாங்கள் செயல்படுவோம் எங்களை யாரும் கேள்வி கேட்க முடியாது என்பதே அதுவாகும்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதல்கள் எதிர்பார்த்ததை விட கட்டுப்படுத்தப்பட்டவையாக இருந்தன என்று சில வல்லுநர்கள் கூறிகின்றனர். அதாவது இந்த தாக்குதல் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலாக இருந்ததாக அவர்கள் மேலும் கூறுகின்றனர்.அதே நேரம் எண்ணெய்க் கிடங்கு மற்றும் அணுசக்தி நிலையங்களைத் தாக்க வேண்டாம் என்று அமெரிக்கா இஸ்ரேலுக்கு பகிரங்கமாக அழுத்தம் கொடுத்தது. அமெரிக்காவின் ஆலோசனையை இஸ்ரேல் கருத்தில் கொண்டிருக்கிறது. இந்த தாக்குதலுக்கு பதில் தந்த ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்ச்சி, ஞாயிற்றுக்கிழமை, "தாக்குதல் நடத்தப்படுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பு எங்களுக்குத் தகவல் கிடைத்தது," என்று கூறினார். ரஷ்யா உளவுத்துறை ஈரானுக்கு இது வரை பல்லாயிரக்கணக்கான ஏவுகணைகளை இஸ்ரேலிய நாட்டின் பல்வேறு பகுதிகளில் வீசி மிகப்பெரிய அளவிலான சேதாரத்தை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் தலைவராக 32 ஆண்டுகளாக செயல்பட்ட ஹஸன் நஸ்ருல்லாஹ் வை இஸ்ரேலிய ராணுவம் படுகொலை செய்யப்பட்ட பிறகு இனி ஹிஸ்புல்லாஹ் அமைப்பு அழிந்து விட்டது என்று இஸ்ரேலிய அரசு கொக்கரித்த நிலையில் அப்படி ஏதும் எங்களை முடக்கி விட முடியாது என்பதை அந்த அமைப்பு தொடர்ந்து நிறுபித்து வருகிறது. இந்த அமைப்பின் புதிய தலைவராக நயீம் காசிம் நியமனம் செய்யப்பட்டார்.இந்த நிலையில் இஸ்ரேலிய அரசு ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் பொறுப்பு என்பது வெறும் தற்காலிகமானது மட்டுமே என இஸ்ரேல் ராணுவம் குறிப்பிட்டிருந்த நிலையில், அதன் தலைவர் Naim

இருந்து இஸ்ரேலிய ராணுவம் பின் வாங்கி வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. லெபனான் தெற்கு பகுதியில் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு தங்களது முழுமையான பலத்தை இஸ்ரேலிய ராணுவம் மீது தாக்குதலை நடத்தி வரும் நிலையில் அதனை எதிர்த்து போரிட இயலாமல் இஸ்ரேலிய ராணுவத்திற்கு மிகப் பெரிய அளவில் ஆன உயிர் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த உயிர் இழப்புகளை கணக்கில் எடுத்துக் கொண்டால் 100 க்கு மேற்பட்ட இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் கொல்லபட்ட நிலையில் நூற்றுக்கணக்கான இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் பலத்த காயமடைந்த நிலையில் உயிர் தப்பி பிழைத்த நிலையில் தான் தற்போதைய நிலையில் லெபனான் ஹிஸ்புல்லாஹ் அமைப்பு உடனான சமாதானம் என்கிற நிலைக்கு இஸ்ரேலிய அரசும் அதன் ராணுவ தலைமையும் வந்துள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

தெரிவித்துள்ளது சர்வதேச நாடுகளை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தி உள்ளது என்பதே யதார்த்தமான நிலையாகும். இதற்கிடையில் எப்போது வேண்டுமானாலும் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஈரான் ராணுவமும் தங்களது அதிகாரப்பூர்வ எக்ஸ் பக்கத்தில் கவுண்டவுன் போட்டது பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தக்கூடாது என அமெரிக்கா கூறி இருக்கிறது.

இது தொடர்பாக பேசிய அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் ஆன கரீம் ஜீன் பியர் இஸ்ரேலின் தாக்குதலுக்கு ஈரான் பதில் தாக்குதல் நடத்தக்கூடாது. ஒருவேளை எச்சரிக்கையை மீறி தாக்குதல் நடத்தினால் இஸ்ரேலை பாதுகாப்பதற்கு அமெரிக்கா உதவும் என தெரிவித்திருக்கிறார். இதனால் தாக்குதல் நடத்த இருக்கும் செய்தியை முன்னரே தெரிவித்து விட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத்தான் அன்றிரவு தாக்குதல் நடத்தப்படும் சாத்தியங்கள் இருப்பதாக எங்களுக்கு மாலையில் சில தகவல்கள் கிடைத்தன," என்று அப்பாஸ் அராக்ச்சி செய்தியாளர்களிடம் கூறினார்.

இதற்கிடையில் இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்க வேண்டாம் என மேற்கத்திய நாடுகள் ஈரானிடம் கேட்டு கொண்டன. இரு மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இடையிலான மோதல்களை அது பெரிதுப்படுத்தும், பெரியளவிலான பிராந்தியப் போருக்கு வழிவகுக்கும் என்று கவலைத் தெரிவித்தன. தற்போதைய நிலையில் இந்த போர் மிகுந்த ஆபத்தான நிலையில் சென்று கொண்டு இருப்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

அதே சமயம், "இஸ்ரேல் நடத்திய தாக்குதல் பெரியளவில் சேதத்தை ஏற்படுத்தவில்லை என்றும் ஈரானில் மக்கள் அன்றாட வாழ்க்கையை எப்போதும் போல இயல்பாக தொடர்கின்றனர் என குறிப்பிட்டு ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மேலும் அந்த செய்தி ஏடுகள் ஈரானின் இயல்பான வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் படங்களையும் பதிவிட்டுள்ளனர். அதாவது இஸ்ரேலியத் தாக்குதல் பெரிய சேதம் ஏற்படுத்தவில்லை என்பதை வெற்றியாக சித்தரிக்க ஊடகங்கள் நினைப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதற்கிடையில் லெபனானில் இருந்து செயல்படும் ஹிஸ்புல்லா பாரிய அளவிலான தாக்கத்தை இஸ்ரேலிய நாட்டின் மீது தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது. ஹிஸ்புல்லாஹ் தலைவர் ஹசன் நஸ்ருல்லாஹ் மற்றும் இந்த அமைப்பின் முன்னணி தலைவர்கள் படுகொலை செய்யப்பட்ட நிலையிலும் கூட அந்த அமைப்பு Qassem விவகாரமான பதிலடி அளித்துள்ளார். அதாவது அவரை நாங்கள் விரைவில் படுகொலை செய்வோம் என்று இஸ்ரேலிய ராணுவம் கூறி உள்ளது.இதனனையடுத்து இஸ்ரேலின் கொலைப்பட்டியலில் 71 வயதான Naim Qassem தற்போது இடம் பிடித்துள்ளார் என்றே நம்பப்படுகிறது. நெதன்யாகு குடியிருப்பின் மீது ட்ரோன் தாக்குதல் நடந்ததை குறிப்பிட்டுள்ள ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் நையிம் காசிம்,எங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்கள் மீதான குண்டுவீச்சு எங்களை பின்வாங்கச் செய்யாது என்பதை எதிரி அறிந்திருக்க வேண்டும். நாங்கள் வலுவாக உள்ளோம், நெதன்யாகுவின் அறைக்கு ஒரு ட்ரோனை அனுப்ப எங்களால் முடிந்தது என்றார்.

குறித்த தாக்குதல் சம்பவத்தின் போது நெதன்யாகு குடும்பம் அந்த குடியிருப்பில் காணப்படவில்லை. அது நெதன்யாகுவின் விடுமுறை மாளிகை என்றும் கூறப்படுகிறது. ஆனால் தமது குடியிருப்பு மீதான தாக்குதலுக்கு பதிலடி உறுதி என்றே நெதன்யாகு அறிவித்துள்ளார்.

ஆனால், நெதன்யாகு இந்த முறை தப்பியுள்ளார், அவரது நேரம் இன்னும் வரவில்லை போல. நெதன்யாகு பயத்தில் இருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது, நாங்கள் அவரை குறி வைத்திருப்பது அவருக்கு தெரியும் என்றார்.

லெபனானில் உள்ள தங்களது ஆதரவாளர்கள் கொஞ்சம் பொறுமை காக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ள ஹிஸ்புல்லாஹ் அமைப்பின் தலைவர் நயீம் காசிம், நஸ்ரல்லாவின் இரத்தம் எங்களது நரம்புகளில் தொடர்ந்து கொதிக்கும், இந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதற்கான எங்களது உறுதியை அது அதிகரிக்க செய்யும் என்றார்.

இதற்கிடையில் லெபனானில்

அதேநேரத்தில் ஹிஸ்புல்லாஹ் தலைவர் நயிம் காஸிம் தாங்கள் சமாதானத்திற்கு தயாராக இருப்பதாகவும் அதேநேரத்தில் யூத சியோனிச அரசு முறைப்படியான எங்கள் கோரிக்கையை ஏற்று கொள்ள முன் வர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் ஈரான் அரசு அடுத்த கட்ட தாக்குதலை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுத்து வரும் நிலையில் சில நாட்களுக்கு முன் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு வின் தலைமையில் போர் சூழல் குறித்து தீவிரமான ஆலோசனை சுரங்கப்பாதையில் ரகசியமாக நடைபெற்றதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதேநேரத்தில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தான்யாகுவின் பிரதமர் அலுவலகத்தில் இருந்து அவரது பாதுகாப்பு அதிகரிக்கவும் வான்வெளியில் பறக்கும் போது அதிக விமானங்களை பாதுகாப்புகாக அனுப்பவும் விண்ணப்பிக்க பட்ட நிலையில் தற்போது அது குறித்து முழு விசாரணை சென்று கொண்டு இருக்கிறது.

ஈரான் ஒரு வேளை தாக்குதல் நடத்தினால் அதன் விளைவுகள் இரு தரப்பிலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. வான் பரப்பில் வல்லமை கொண்ட கு15, கு16 மற்றும் கு35 ஆகிய வல்லமை கொண்ட போர் விமானங்கள் மூலம் சர்வதேச நாடுகளை மிரட்டி வரும் இஸ்ரேலிய ராணுவத்திற்கு பதில் தரும் வகையில் ரஷ்யா விமானங்கள் ஈரானுக்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரத்தில் அணு மாத்திரைகளை பாலிஸ்டிக் ஏவுகணைகளை பயன்படுத்தி இஸ்ரேலிய நாட்டிற்குள் ஒரு வேளை ஈரான் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று இஸ்ரேலிய அரசு அச்சம் இஸ்ரேல் ஈரான் இடையேயான போர், ஈரான் அமெரிக்கா இடையேயான போர் போல மாறும் வாய்ப்பு இருப்பதாக கூறுகின்றனர் உலக அரசியல் நிபுணர்கள் .

ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் காரணமாக.. கடுமையான பதற்றம் ஏற்பட்டு உள்ளது. முக்கியமாக எக்ஸ் பக்கத்தில் கூறுழசடனறுயசஏ என்ற டேக் டிரெண்டாகி வருகிறது. ஏற்கனவே சீனா, ரஷ்யா, இஸ்ரேல், ஈரான் உள்ளிட்ட பெரிய நாடுகள் அடுத்தடுத்து போருக்கு தயாராகி வருகிறதோ என்ற அச்சம் ஏற்பட்டு உள்ளது. இந்த நாடுகளின் சமீபத்திய பேச்சுக்கள், நடவடிக்கைகள் இது தொடர்பான விவாதத்தை, அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கனவே ஒரு பக்கம் அமெரிக்காவுடனான நீண்ட மோதலுக்கு ரஷ்யா தயாராக வேண்டும் என்று ரஷ்யா நாட்டு அதிபர் விளாடிமிர் புடின் அந்நாட்டு அதிகாரிகளுக்கு தெரிவித்து உள்ளார். இரண்டு நாட்டு உறவுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து வாஷிங்டனுக்கு எச்சரிக்கையை அனுப்பி உள்ளோம் என்று துணை வெளியுறவு மந்திரி செர்ஜி ரியாப்கோவ் தெரிவித்து உள்ளாராம்.

இந்த நிலையில் இஸ்ரேலிய ராணுவம் காசா மற்றும் லெபனானில் முழுமையாக தோல்வியை தழுவிய நிலையில் அதற்கான அத்தாட்சியாக ராணுவ துறை அமைச்சர் யோகெலன்ட் பிரதமர் பெஞ்சமின் நிதான்யாகு விற்கு எழுதிய கடிதம் மற்றும் வாய் மொழிகளே இதற்கு சாட்சியாக இருக்கிறது. அதாவது எந்தவொரு இலக்கு மற்றும் செயல்திறன் இல்லாமல் இன்னும் நடைபெற்று வரும் இந்த போர் முடிவுக்கு வந்து விட்டதாகவே நான் நம்புகிறேன் என்று அவர் எழுதிய குறிப்பை நான் இங்கே சுட்டி காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

# சுயேட்சைக் குழு 11 ன் வெற்றிக்கு அக்குறணை மக்களின் வகிபாகம் முக்கியமானது

**வேட்பாளர் இஸ்திஹார் இமாமுதீன்**

(இக்பால் அலி)

தேர்தல் இறுதிப் பிரச்சார கால கட்டத்தில் போலியான பொய் பிரச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டு சேறு பூசி மக்களின் வாக்குகளை சிதறடிக்கின்ற காரியங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இது அவர்களுடைய இயலாத் தன்மையை வெளிப்படுத்துகின்ற தேர்தல் நடவடிக்கையாகும். எது எவ்வாறாயினும் அக்குறணை பிரதேசத்தில் பெரு எண்ணிக்கை யிலான முஸ்லிம் வாக்காளர்கள் இருக்கின்றார்கள்.

இம்முறை கண்டி மாவட்டத்தில் சுயேச்கைக் குழு 11 இல் காற்பந்து சின்னத்தில் போட்டியிடும் அணியில் இருந்து இரு வேட்பாளாகள் நிச்சயமாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.



எனவே இதன் போது அக்குறணை பிரதேச மக்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெற வேண்டும் என்று முன்னாள் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளரும் கண்டி மாவட்ட சுயேச்சைக் குழு 11 இல் காற்பந்து சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமான இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்தார்.

# திப்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சின்னம் சூட்டும் நிகழ்வு



கே/அரநாயக்க திப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் எம். எஸ். எம்.அப்துல்லா அவர்களின் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைப்பெற்றது. இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை விமானப் படை அதிகாரி எயா கமாண்டோ எம். எஸ். எம். ஹம்ஸா அவர்களும், கௌரவ அதிதியாக பொலிஸ் நிலைய பெண்கள் பிரிவின் பொறுப்பதிகாரி திருமதி அதிகாரி, மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பழைப மாணவ, மாணவியர் சங்க உறுப்பினர்கள் வில்பொல ஜும்ஆ பள்ளி வாசல் தலைவர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.



பருவமழையால் அனுராதபுரம் நகரம் வெள்ளத்தில் மூழ்குவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச நகரில் ஆய்வு ஒன்றை (02) மேற்கொண்ட போது

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

# பெண்களுக்கான சுயதொழில் பயிற்சி பட்டறை

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ், புத்தளம் எம் யூ எம் சனூன்)

கற்பிடி செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் கற்பிட்டி பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுயதொழிலை மேற்க்கொள்ளும் பெண்களுக்கான சுய தொழில் ஊக்குவிப்பு இரண்டு நாள் பயிற்சி பட்டறை கடந்த 31 ம் மற்றும் 01 ம் திகதிகளில் கற்பிட்டி செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தில் நடைபெற்றது.



இப் பயிற்சி பட்டறையில் தேங்காய் பாலில் செய்யக்கூடிய அரிய வகை. உணவு பண்டங்க ளுக்கான தேங்காய் கேக். தேங்காய் பால் டொபி, தேங்காய் ஐஸ்கிரீம், தேங்காய் புடிங், மற்றும் தேங்காய் டொபி போன்ற உணவுப் பண்டங்கள் செய்து காண்பிக்கப்பட்டது.

இதற்கு வளவாளர்களாக தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி சந்தன ரத்நாயக, கள உத்தியோகத்தர் அனுருந்த சுவர்வீர, மற்றும் சாந்தி மெனிகே ஆகியோர் கலந்து கொண்டனர். இப் பயிற்சி பட்டறையின் பிரதான நோக்கங்களாக பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் புதிய வகையான உணவுகளை அறிமுகப்படுத்தல் ஆகும் என கற்பிட்டி செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தி நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முனாஸ் தெரிவித்தார்.



தேசிய மக்கள் சக்தியில் அனுராதபுரம் மாவட்டத்தில் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஏ.எம்.முபாரக் (மௌலவி) நேகமவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது.

(எம்.ரீ.ஆரிப் அநுராதபுரம்)

# அரசியல் எனக்கு தொழில் அல்ல அது ஒரு சேவை

**கற்பிட்டியில் தராசு கூட்டணியின் காரியாலய திறப்பு விழாவில் அலி சப்ரி றஹீம்**

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ். புத்தளம் எம் யூ எம் சனூன்)

கற்பிட்டியில் தராசு கூட்டணியின் தேர்தல் பிரச்சார காரியாலய திறப்பு விழா கற்பிட்டியை பிரதிநிதித்துவப் படுத்தும் எச்.எம். எம் பர்ஸான் தலைமையில் வியாழக்கிழமை (31) இரவு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தராசு கூட்டணியின் புத்தளம் மாவட்ட முதன்மை வேட்பாளர் அலி சப்ரி றஹீம் மற்றும் அவருடன் கூட்டணியில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தராசு கூட்டணியின் முதன்மை வேட்பாளர் அலி சப்ரி றஹீம்



கடந்த பாராளுமன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் எவ்வாறு ஒற்றுமைபட்டு சிறுபான்மை சமூகத்திற்கான முஸ்லிம் பிரதி நிதித்துவத்தை பெற்றுக் கொண்டோமோ அவ்வாறே இன்ஷா அல்லாஹ் தராசு கூட்டணியை மக்கள் இம்முறை வெல்ல வைத்நு சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு . மேலும் அரசியல் என்பது எனக்கு தொழில் அல்ல அது ஒரு சேவை எனக்கென்று தொழில் உண்டு அதனூடாகவும் மக்களுக்கு நிறையவே சேவை செய்துள்ளேன் செய்து வருகின்றேன் இன்ஷாஅல்லாஹ் தொடர்ந்து செய்வேன் எனவும் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் இலங்கை மாணவர்களுக்கு அல்லாமா இக்பால் புலமை பரிசில் வழங்கி வைப்பு

இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம், பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் தகுதியான இலங்கை மாணவர்களுக்கான அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் விருது வழங்கல் 2024 நிகழ்வினை 30 அக்டோபர் 2024 அன்று ஏற்பாடு செய்திருந்தது. இப்புலமைப் பரிசிலானது பாகிஸ்தானின் தலைசிறந்த கவிஞரும் தத்து ஞானியுமாக திகழ்ந்த அல்லாமா முஹம்மது இக்பால் அவர்களின் பெயரில் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

இப்புலமைப்பரிசில் திட்டமானது 2019 இல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடம் இப்புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கை முழுவதும் உள்ள தகுதியான 200 மாணவர்களுக்கு பாகிஸ்தானில் உயர்கல்வியினை தொடர்வதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேலும், அடுத்த ஆண்டுக்கான இப்புலமைப் பரிசிலுக்கான விண்ணப்பம் 2025ம் ஆண்டு பெப்ரவரியில் கோரப்படும்.



பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகர், மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) பாஹீம் உல் அஸீஸ் இந்நிகழ்வில் உரையாற்றும் போது, பாகிஸ்தான்-இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கு இடையே நீண்டகால உறவு காணப்படுவதாகவும், பாகிஸ்தானில் கல்வி கற்கும் இலங்கை மாணவர்கள் பாகிஸ்தானியர்களின் விசேட விருந்தினர்கள் என்றும், இம்மாணவர்கள் சிறப்பான முறையில் உபசரிக்கப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார். பாதுகாப்புப் படைகளின் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் வர்த்தகர்கள், கல்விமான்கள், அரச அதிகாரிகள் உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். பிரதம அதிதி, உயர்ஸ்தானிகர் மற்றும் ஏனைய முக்கிய பிரமுகர்கள் புலமைப்பரிசில் விருதுகளை மாணவர்களுக்கு பகிர்ந்தளித்தனர்.

# அல் குர் ஆனை முழுமையான மனம் செய்த சிறுவனுக்கு ஊர் தழுவிய ரீதியில் கௌரவிப்பு

(எம்.பஹத் ஜுனைட்-காத்தான்குடி செய்தியாளர்)

செவிப்புலன்களின் உதவியுடன் மாத்திரம் 12 வயதில் அல் குர் ஆனை முழுமையாக கேட்டு மனம் செய்து அல் ஹாபிழாக சாதனை படைத்த கண் பார்வையை இழந்த சிறுவன் எம்.முக்பில் சினானை கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (01) ஜும் ஆ தொழுகையை தொடர்ந்து புதிய காத்தான்குடி பத்ரிய்யாஹ் ஜும் ஆப் பள்ளிவாயலில் இடம்பெற்றது.



காத்தான்குடி பள்ளிவாயல் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வு சம்மேளனத்தின் தலைவர் பொறியியலாளர் ஏ.எம். எம்.தௌபீக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சம்மேனத்தின் உறுப்பினர்கள் பள்ளிவாயல் நிர்வாகத்தினர் மற்றும் பெருந்திரளான ஊர்மக்கள் கலந்துகொண்டு அச்சிறுவனை பாராட்டி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சமூகத்துக்காக குரல் கொடுத்தால் சிறையில் அடைக்கப்பட்டேன்!

## - ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் முஹம்மத் பஸ்லால் -



அஸ்ரப் ஏ. சமட்

**கே: உங்களைப் பற்றிய ஓர் பார்வை?**

ப: நான் மொஹமட் பஸ்லால். தற்போது தெஹிவளையில் வசிக்கின்றேன். நான் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணி கட்சியில் பாராளுமன்றத் தேர்தலில் குதிக்கின்றேன். எனது விருப்பு இல 14. சின்னம் முகத்தில் அணியும் கண்ணாடி ஆகும். எனது கட்சித் தலைவர் ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், முன்னாள் மத்திய மற்றும் ஊவா மாகாண ஆளுனராக கடமையாற்றியவருமான மைத்திரி குணரத்ன ஆவார்.

நான் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் என்னை இரண்டு வருடங்கள் சிறையில் அடைத்தார்கள். கொவிட் காலத்தில் முஸ்லிம்களது ஜனாஸாக்களை பற்ற வைக்கும் போது நான் அதற்கு எதிராக குரல் கொடுத்தேன்.. குறிப்பாக எமது சமூகம் என்ற ரீதியில் அநீதி ஏற்பட்டால் முதலாவது குரல் கொடுப்பவன் நான்தான். அதற்காகவே அவர்கள் அரசாங்கத்தினை நான் தாக்குவதாகச் சொல்லி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இரண்டு வருடங்களில் 1 வருடம் சி.ஐ.டி யிலும் மற்றைய வருடம் மகசின் சிறையிலும் அடைத்தார்கள்.

அதிஷ்டவசமாக கோட்டாபய ராஜபக்ச வின் அரசாங்கம் இரண்டு வருட காலத்தில் ஒழிந்தது. எனது கட்சியின் தலைவர் மைத்திரி குணரத்ன சட்டத்தரணி தான் எனக்கு பிணை எடுத்துத் தந்தார். இவரே தான் டாக்டர் சாபிக்கும் பிணை எடுத்துக் கொடுத்தவர். அதற்காக நான் அவருக்கு நன்றியுடையவனாக இருத்தல் வேண்டும்.

எனனை வேண்டுமென்றே கடந்த கால அரசு சிறையில் அடைத்தார்கள். எவ்வித வழக்குகளோ குற்றங்களோ எனக்கு இல்லை.

கடந்த 4 வருடமாக நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் என்கிறார்கள். எவ்வித வழக்கும் இதுவரை இல்லை. எதிர்வரும் டிசம்பரில் எனக்கு நீதிமன்றத்தில் விசாரணை ஒன்று இருக்கின்றது. நான் பயங்கரவாதி என்றால் எனக்கு ஓர் தண்டனை வழக்கு இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லை. எனது எழுத்துக்கள். எனது சமுக சிந்தனைகள் முஸ்லிம் மக்களுக்கு நடைபெறும் அநீதிகளை சுதந்திரமாக எவ்வித பயமுமின்றி ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் மும் மொழிகளிலும் பேசினேன். எழுதினேன். குரல் கொடுத்தேன். அக் காரணத்திற்காகவே என்னை விசாரணை என்ற ரீதியில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வைத்து என்னை கைது செய்தார்கள்.

**கே: உங்களது அரசியல் நடவடிக்கைகள் என்ன?**

ப: நான் வெற்றியடையாவிட்டாலும் கொழும்பு மாவட்டத்தில் எனது தலைவர் மைத்திரி குணரத்ன கட்டாயம் பாராளுமன்றம் செல்லுதல் வேண்டும். அவர் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். இந்த நாட்டில் பயங்கரவாதம் இனப்பிரச்சினைகள் மீண்டும் நடைபெறாதவாறு சட்ட ஒழுங்குகள் கொண்டு வருதல் வேண்டும். இனப்பிரச்சினைகளை தூண்டுதல் மற்றும் அதில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படல் வேண்டும்.

இந்த நாட்டில் நடைபெற்ற ஜே.வி.பி, தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அதன் பின்னர் அளுத்கம, கண்டி, திகன போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற இன பிரச்சினைகளில் இதுவரை யாரும் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. இவைகள் மீண்டும் நடைபெறாது என என்ன உத்தரவாதம் உள்ளது? ஆகவே தான் அதற்காக ஒழுங்கான ஓர் சட்டம் இந்த நாட்டில் இருத்தல் வேண்டும்.

சஹ்ரான் போன்ற 8 பேரை இயக்கி அப்பாவி கிறிஸ்தவ மக்களை கொலை செய்யத் தூண்டிய உண்மையான குற்றவாளிகளை இனம் கண்டு அவர்களுக்கும் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்

இந்த நாட்டில் உலக பயங்கரவாதியாக சித்தரிக்கின்ற இஸ்ரவேலர்கள் 10 அல்லது 20 டாலர் சுற்றுலாத்துறைக்காக இலங்கை வருகின்றனர். இவற்றினை இலங்கை அரசாங்கம் தடுத்தல் வேண்டும். பலஸ்தீன் நாட்டினையும் அழித்து அம்மக்களையும் அழிக்கும் இஸ்ரவேலர்களும் ஓர் பயங்கரவாதிகள். அவர்களை இலங்கை நாட்டுக்கு அழைத்து அவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கக் கூடாது..

அவர்களுக்கு வீசா வழங்குவதை இலங்கை அரசாங்கம் தடுத்தல் வேண்டும். அவர்கள் சட்டவிரோதமாக பலஸ்தீன் நாட்டினை பிடித்தவர்கள். இவர்களுடன் நட்பு கொள்வதனை விட்டு உலகில் உள்ள முஸ்லிம் அரபு நாடுகளை நாம் கவர்ந்து அவர்களை இந்த நாட்டுக்கு சுற்றுலாப் பிரயாணிகளாக நாம் கொண்டு வருதல் வேண்டும். அந் நாட்டவர்கள் ஓர் நாளைக்கு 300 அல்லது 500 டாலர் எமது நாட்டில் செலவழிக்கக் கூடியவர்கள். அவர்கள் நாடுகளில் தான் நமது நாட்டவர்கள் 10 இலட்சம் பேர் தொழில் செய்கிறோம். இந்த நாட்டின் பொருளாதாரத்தில் 10 வீத அந்நியச் செலவானியை எமது நாடு பெறுகின்றது. அவர்களிடம் நாம் சிறந்த நட்பு வைத்துக் கொண்டால் அவர்கள் இலங்கைக்கு பாரிய நீர் விநியோகம், பல்கலைக்கழகங்களில் வைத்தியத்துறை வைத்தியசாலைகளில் பாரிய நோய் வாட்டுக்களை நிர்மாணித்து தருவார்கள். ஏற்கனவே அவர்கள் அதனைச் எமது நாட்டுக்குச் செய்து கொடுத்துள்ளார்கள். அவர்கள் இலங்கைக்கு பெற்றோல் கேஸ் போன்ற எரிபொருட்கள் எமக்கு வட்டியில்லாமல் இலகு கடன் அடிப்படையில் நிபந்தனை அற்ற கடனில் வழங்குவார்கள்.

அரபு நாட்டவர்கள் தற்பொழுது மலேசியா போன்ற நாடுகளுக்கு பெருமளவில் சுற்றுலாப் பிரயாணிகளாகச் செல்கின்றனர். இதற்கு காரணம் அங்கு முற்று முழுதாக ஹலால் உணவு உள்ளது. இலங்கையிலும் சுற்றுலாத் துறையில் உள்ள சிங்கள கிறிஸ்தவர்கள் முழுதாக ஹலால் உணவு அறிமுகப்படுத்தினால் அராபியர்கள் பெரும்பாலோனோர் இங்கு வருவார்கள்.


அத்துடன் முதலிடவும் அவர்கள் இங்கு வரமுடியும். அதற்கான நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

பலஸ்தீன் நாட்டுக்காக நாம் குரல் கொடுத்து அதனை மீட்டெடுத்து அங்கு புனர் நிர்மாணம் பணிகளுக்கு எமது நாட்டவர்கள் தொழில் செய்ய முடியும். அதனை விடுத்து நமது நாட்டில் இருந்து 2500 ஊழியர்கள் இஸ்ரவேலில் தொழில் செய்யச் செனறிருப்பது வெறுக்கத்தக்க தானதொரு விடயமாகும். பலஸ்தீனர்களை விரட்டி அவர்களது மாமிசத்தில் நாம் உண்ணுவதற்கு சமம்.

கடந்த காலங்களில் இந்தியா எமது நாட்டுக்கு உதவி செய்தாலும் அவர்கள் ரஷ்யாவிடம் 100 ருபாவுக்கு வாங்கிய பெற்றோலை எமக்கு 200க்கு விற்கும் கைங்கரியத்திலேயே இறங்கினார்கள். அவர்கள் வடக்கில் இருந்து ராமேஸ்வரம் பாலம் அமைப்பது மீண்டும் கச்ச தீவினைக் கேட்பது, தமிழ் நாட்டு மீனவர்கள் எமது வடக்கு மீனவர்களது மீன்களை களவாக பிடித்துச் செல்வது எமது நாட்டின் இறையாண்மைக்கு பங்கம் விளைவிக்கும் செயலாகும்.

நாம் சுயாதீனமாக சுதந்திரமானதொரு நாடு. அதற்காக அண்டை நாடுகளுடன் நட்புறவுடன் இருப்பது உலக வழமையாகும். அதற்காக இந்தியா எமது உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது. எனக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலில் எமது கட்சியான ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சியை நீங்கள் தெரிவு செய்து எனது இலக்கம் 14 மற்றும் எனது தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்தின வினையும் வெற்றிபெறச் செய்தல் வேண்டும். எங்கள் சின்னம் முகத்தில் அணியும் கண்ணாடியாகும்.



# தூய்மையான ஆட்சியை நிறுவும் வகையில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை உறுதி செய்வோம்

## களுத்துறை வேட்பாளர் அரூஸ் அஸாத் வேண்டுகோள்

( பீ.எம் முக்தார்)


நாட்டு மக்கள் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளராக போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க வை தெரிவு செய்ததைப் போல் ஊழல், இலஞ்சம், வீண் விரயம், அரசியல் பழிவாங்கல்கள் இல்லாத தூய ஆட்சியை முன்னெடுக்க பலமான அரசாங்கத்தையும் தெரிவு செய்வது காலத்தின் தேவையாகும் என தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட வேட்பாளரும், பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினருமான அரூஸ் அஸாத் தெரிவித்தார்.

பேருவளை தொகுதியில் உள்ள தர்காநகர், மக்கொன, பயாகலை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பேசும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

களுத்துறை மாவட்ட தலைமை வேட்பாளர் டாக்டர். நளிந்த ஜயதிஸ்ஸ உட்பட வேட்பாளர்கள் கலந்து கொண்ட இக் கூட்டங்களில் பெருமளவிலானோர் பங்குபற்றினர்.

அஷரூஸ் அஸாத் மேலும் கூறியதாவது, நடைபெறவுள்ள தேர்தலில் தேசிய மக்கள் சக்தியே வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். இதில் சிறிதேனும் சந்தேகமில்லை. களுத்துறை மாவட்ட மூவின மக்களும் ஒன்றிணைந்து எமக்கு பெரு வெற்றியை பெற்றுத் தர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி சார்பில் டாக்டர். நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் சிறந்த வேட்பாளர்



குழுவொன்று போட்டியிடுகிறது. குறைந்த பட்சம் 8 பாராளுமன்ற பிரதிநிதிகளையாவது இம் மாவட்ட மக்கள் தேசிய மக்கள் சார்பில் தெரிவு செய்ய வேண்டும். அதன் மூலம் கூடிய சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நாட்டு மக்களை ஊழல், அதிகார துஷ்பிரயோகம், இலஞ்சம், மோசடிகளற்ற தூய ஆட்சியையே வேண்டி நிற்கின்றனர். அதற்காகவே ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வை தெரிவு செய்தார்கள். அதே போல் இனவாதம் இல்லாத ஆட்சியை வேண்டி நின்றனர்.

14 ஆம் திகதி மலரப் போகும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இனவாதத்திற்கு ஒரு போதும் இடம் கிடையாது. நாட்டு மக்கள் எதிர்பார்த்த சிறந்த ஆட்சி மலரும்.

தேசிய மக்கள் சக்தியையும், சகோதரர் அநுர குமார திஸாநாயக்க வை பற்றியும் ஜனாதிபதி தேர்தலின் போது போலியான அவதூறுகளை கூறினார்கள். மக்கள் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. சகோதரர் அநுரகுமார திஸாநாயக்க வை வெற்றி பெறச் செய்தார்கள். இந்த பொதுத் தேர்தலிலும் போலியான கட்டுக்கதைகளை கூறி எதிர் கட்சியினர் வாக்குகளை பெற முயற்சிக்கின்றனர். அந்த முயற்சி கை கூடாது.

எதிர்வரும் ஐந்து வருட ஆட்சி சிறப்பானதாக அமையும். இதற்கு மக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம். களுத்துறை மாவட்ட சிறுபான்மை சமூகங்களும் இன்று தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்காக இன்று எம்முடன் கைகோர்த்துள்ளனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் போது இந்த மாவட்டத்திலிருந்தும் சிறுபான்மை பிரதிநிதி அங்கம் வகிக்க வேண்டும். சிறுபான்மை மக்களின் முழுமையான பங்களிப்பு மூலமே அது சாத்தியமாகும் என்றும் கூறினார்.



பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களை ஆதரித்து தெஹிவளை ரோஸ்வூட் ஹோட்டலில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் அண்மையில் நடைபெற்றது.அபேட்சகர் டாக்டர் ரிஸ்வி சாலி, கூட்ட ஏற்பாட்டாளர் எம். கே.,எம் நவுபர் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

# விமரிசையாக நடைபெற்ற துருக்கியின் குடியரசு தினம்



(அஷ்ரப் ஏ சமத்)

துருக்கி நாட்டின் 101 வது குடியரசு தினம் (29) கொழும்பு காலி முகத்திடலில் உள்ள ஹோட்டலில் இலங்கைக்கான துருக்கித் தூதுவர் செமி லிற்டிபு துர்கட் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் கலந்து கொண்டு துருக்கி -இலங்கை நட்புறவு பற்றி உரையாற்றினார்

அங்கு உரையாற்றுகையில்..

துருக்கி -இலங்கை பெருமளவில் சிலோன் டீ கொள்வனவு செய்யும் நாடாகும் அத்துடன் துருக்கி இலங்கைக்கு கடந்த கால இயற்கை அனர்த்தங்களின் போது பல உதவிகளை செய்துள்ளன. அதற்காக எமது நாட்டின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும் துருக்கி இலங்கை நட்புறவு, அபிவிருத்தி, விமானப் போக்குவரத்து. கல்வி புலமைப்பரிசில்கள் ஊடக பயிற்சி போன்ற விவகாரங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் ஆளுநர் அங்கு உரையாற்றினார்.

இந் நிகழ்வின்போது துருக்கி தூதுவர் இலங்கை சுதந்திரமடைந்த நாளில் இருந்து இரு நாடுகளுக்குமான இராஜ-தந்திர உறவு இருந்து வருகின்றது. துருக்கி உல்லாசப் பிரயாணிகள் மற்றும் துருக்கி தென்கிழக்கு பல்லைக்கழகம் அம்பாறை வடிகாலமைப்பு விவசாயம் புவி ஆராய்ச்சி போன்ற துறைகள், இலங்கை இளைஞர்கள் தொழிற்பயிற்சி, உயர்கல்வித்துறை புலமைப்பரிசில் திட்டம் போன்றவற்றில் உதவி வருவதாகவும் துருக்கி தூதுவர் அங்கு உரையாற்றினார்.

இந் நிகழ்வில் முப்படை தளபதிகள், இராஜதந்திரிகள், துருக்கி நாட்டில் புலமைப்பரிசில் உயர்கல்வியை தொடர்ந்தவர்கள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்

# மொல்லியமலை ஹில்ரிய்யா குர்ஆன் மத்ரஸாவின் மீலாத் விழா



( பீ.எம் முக்தார்)

பேருவளை மொல்லியமலை ஹிழ்ரிய்யா- குர்ஆன் மத்ரஸாவின் வருடாந்த மீலாத் விழாவும, பரிசளிப்பு நிகழ்வும் ஹிழ்ரிய்யா ஜும்மா பள்ளிவாசல் முற்ற வெளியில் சிறப்பாக நடைபெற்றது.

குர்ஆன் மத்ரஸா சிறார்களிடையே நடாத்தப்பட்ட சன்மார்க்க அறிவுப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய சகல மாணவர்களினதும் நிகழ்சிகள் இங்கு மேடையேற்றப்பற்றன.

முழு நாள் நிகழ்ச்சியாக நடைபெற்ற இந்த மாபெரும் மீலாத் விழாவில் கிராஅத், கஸீதா, இஸ்லாமிய கீதம், மணி மொழிகள், பேச்சு உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

குர்ஆன் மத்ரஸா அதிபர் மௌலவி அஸ்ஸெய்யித். ஜவ்பர் மௌலானா (மக்கி) யின் வழிகாட்டலின் கீழ் நிகழ்ச்சிகள் நடைபெற்றதோடு சங்கைக்குரிய அஷ்ஷெய்ஹ். மௌலவி ஸக்கி அஹ்மத் (அஷ்ரபி) பின் அஷ்ஷெய்ஹ். காலிப் அலவி ஹாஜியார் அலவியதுல் காதரி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மொல்லியமலை அபினவராம விஹாரையின் அதிபதி ஹடிகல்லே விமலசார தேரோ, பள்ளிவாசல் இமாம் மௌலவி. நஸ்ரின், மௌலவி. எம்.என்.எம் ரிபாக் (அஷ்ரபி) ஏற்றுமதி அபிவிருத்திச்சபை பணிப்பாளர் அஷ்ரப் ஹமீத் மிஹ்லார், ஹமீதியாஸ் நிறுவன முக்கியஸ்தர் அல்-ஹாஜ் பாயிஸ் அலவி உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# பாரா தாஹிருக்கு பல விருதுகள்



(அஷ்ரப் ஏ சமத்)

சென்னை எருக்கஞ்சேரியில் (27) தமிழ் தொண்டன் பைந்தமிழ்ச் சங்கம் மற்றும் நிலா வட்டம் இலக்கிய அமைப்புகள் இணைந்து நடாத்திய கவிஞர் ஜாகிர் உஷேனின் இரட்டை நோபல் உலக சாதனை விழாவில் ஐயாயிரம் மழலைப் பாடல்களைக் ஒரே நூலாக வெளியிடும் நிகழ்வும், தனது ஐம்பது மழலைப் பாடல்களையும் இணைத்து பங்களிப்பு செய்தமைக்காக எழுத்தாளரும், கவிஞரும், ஊடகவியலாளரும், சமூக சேவைகியுமான மாவனல்லை பாரா தாஹீர் "தமிழ் நேசன்", கவிச் சுடர், கவித் தென்றல் ஆகிய பட்டங்களைப் பெற்று விருது வழங்கி, உலக சாதனையாளர் என்ற நற்சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஐயாயிரம் மழலைப் பாடல்கள் அடங்கிய "கவித்தேன் தூளி "நூலில் இவரது"சின்னஞ் சிறு தாரகைகள்"எனும் தலைப்பிலான ஐம்பது மழலைப் பாடல்கள் உள்வாங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் கவிஞர்கள் பங்கு பற்றிய இவ் நிகழ்வில், இவருக்கான உலக சாதனை விருதுகள் வட சென்னையிலுள்ள வீ.ஏ.எம். மஹால் எனும் அரங்கில் வைத்து வழங்கப்பட்டது.

# கொழும்பு மாவட்ட மக்களின் தேவைகளுக்கு அரசியலினூடாக தீர்வை பெற்றுத்தருவேன்

## கொழும்பு மாவட்ட வேட்பாளர் நௌஸர் பௌஸி

கொழும்பு மாவட்ட மக்களின் தேவைகளில் எதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதை அறிந்து, மூவின மக்களுக்கும் எனது அரசியலினூடாக சேவைகளை பெற்றுத்தருவேன் என புதிய ஜனநாயக முன்னணியின் சார்பில் (சிலிண்டர் சின்னம்) கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர் நௌஸர் பௌஸி தெரிவித்தார்.

கொழும்பு பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்ற பொதுமக் களுடனான சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய வேட்பாளர் நௌஸர் பௌஸி, கொழும்பு மாவட்ட மக்களுக்கு நிறைய தேவைகள், பிரச்சினைகள் இருக்கின்றன. இத்தேவைகளில் எதற்கு முதன்மைப்படுத்தி முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்பதை இப்பிரதேசத்திலுள்ள முக்கியஸ்தர்கள் இனங்கண்டு எனது கவனத்திற்கு கொண்டுவருவார்களாயின் அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை என்னால் மேற்கொள்ள முடியும்.

எல்லா பிரச்சினைகளுக்கும் தனியாக நின்று என்னால் நிவர்த்திக்க முடியாது. சிலபோது அரசியல்



அதிகாரங்கள் தேவை. அப்படி அதிகாரங்களை மக்களாகிய நீங்கள் எமக்கு இந்தத் தேர்தலினூடாக பெற்றுத் தருவீர்களாயின் உங்கள் பிரச்சினைக்கான தீர்வை பதவிக்கு வருகின்ற அரசாங்கத்தினூடாக பெற்றுத் தர முடியுமென்பதை உறுதியாக தெரிவிக்கிறேன்.

பதவிக்கு எந்த அரசாங்கம் வந்தாலும் எனக்கு பிரச்சினையில்லை.

உங்களின் பிரதிநிதியாக இருந்து, உங்கள் பிரச்சினைக்குரிய தீர்வை நான் பெற்றுத்தருவேன். எதிர்வரும் 14ஆம் திகதி நீங்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு எமக்கு வழங்குகின்ற 'வாக்கு' என்ற ஆயுதத்தின் அதிகாரத்தினூடாக உங்களுடைய பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பேனென்றும் வேட்பாளர் நௌஸர் பௌஸி தெரிவித்தார்.

# பாராளுமன்ற சுத்தம்; முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கு ஆபத்தா?



எம்.எஸ். அமீர் ஹுசைன்

மக்கள் பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தலுக்கு மீதம் இருப்பது 11 நாட்களாகும். இந்நிலையில் தேர்தல் களம் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. போட்டியிடும் பிரதான அரசியல் கட்சிகளுக் கிடையில் கடுமையான போட்டி நிலை ஏற்பட்டிருப்பதை முன்னெடுக்கப்படுகின்ற தேர்தல் பிரச்சாரங்கள் மூலம் அவதானிக்க முடிகின்றது. பிரதான கட்சிகளான எம்.பி.பி, ஐக்கிய மக்கள் சக்தி, சர்வஜன அதிகார கூட்டணி, ஜனநாயக குரல் கட்சி உட்பட பல கட்சிகள் நாடு முழுவதற்கும் வேட்பாளர்களை நிறுத்தி போட்டியிடுகின்றன. அதிலும் வடக்கு கிழக்கின் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக காணப்படுகின்றது. இந்த பிரதான கட்சிகளுக்கு மேலதிகமாக அப்பிரதேசங்களில் தமிழ் மக்கள் சார்பாக தனித்துவமான கட்சிகளாக பல தமிழ் கட்சிகளும் போட்டியிடுகின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் வடக்கில் உள்ள மக்கள் எப்படி தமது தமிழ் பிரதிநிதிகளை தக்கவைத்துக் கொள்வது என்று கடுமையாக யோசித்து வருகின்றனர். அதே போன்று கிழக்கு உட்பட 22 மாவட்டங்களிலும் கணிசமான முஸ்லிம் வாக்காளர்களை உள்ளடக்கிய தொகுதிகளில் எவ்வாறு தமது சமூகம் சார்பான முஸ்லிம் பிரதிநிதிகளை தக்கவைத்துக் கொள்வது என்ற கவலை முஸ்லிம் தரப்பிற்கு ஏற்பட்டிருக்கின்றது. களத்தில் வேட்பாளர்களை நிறத்தி இருக்கின்ற கட்சிகளோடு மேலதிகமாக பல சுயேச்சைக் குழுக்கள் அல்லது சுயாதீன குழுக்களும் வேட்பாளர்களை நிறுத்தி போட்டியிடுவதால் வாக்குகள் சின்னாபின்னப்பட்டு பிரிந்து செல்லும் போது சில தொகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சிறுபான்மை பிரதிநிதிகள் தெரிவாவது சிக்கலானதாக மாறி இருக்கின்றது.

இப்போது முஸ்லிம்களது அவதானமானது சில சந்தர்ப்பங்களில் கண்மூடித்தனமானதாக மாறி வருகின்றது. தேசிய மக்கள் சக்தியின் தேசிய கொள்கை என்ற அடிப்படையில் இந்த நாட்டில் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நாம் இலங்கையர் என்ற சிந்தனையை ஏற்படுத்துவோம். அதேபோன்று இன அடிப்படையிலான அரசியல் இல்லை. இன அடிப்படையிலான வெவ்வேறான சட்டங்கள் இனி இருக்காது. நாட்டில் ஒரு இனம் மட்டும் அவரவர்களுக்குரிய தனித்துவமான சட்டங்களையும் சலுகைகளையும் அனுபவிக்க முற்பட்டால் பல்வேறுவிதமான பிரச்சினைகள் எழுகின்றது. அதற்கு தீர்வாக ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்று அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தெரிவித்திருந்தார்.

இந்த சிந்தனையால் கவரப்பட்ட எமது சமூகம் சார்ந்த தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) க்கு ஆதரவான முஸ்லிம் சமூக செயற்பாட்டாளர்கள் முஸ்லிம்கள் யாருக்கும் வாக்களிக்கலாம். இனம் என்ற அடிப்படையில் முஸ்லிம் பிரதிநிதிகள் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் நீங்கள் விருப்பமானவர்களுக்கு வாக்களித்து மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யுங்கள் என்ற கருத்து பரவலாக தேர்தல் பிரச்சார மேடைகளிலும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பரப்பப்பட்டு வருகின்றன.

ஆதலால் முஸ்லிம்களை முஸ்லிம் சமூகத்திற்கான முஸ்லிம் பிரதிநிதிகளை தெரிவு செய்து வாக்களிக்கும் நிலையில் இருந்து திசை திருப்பி எமது சமூகத்தை அரசியல் அனாதைகளாக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த பாராளுமன்றத்தில் 22 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்துள்ளனர். அவர்கள் வெவ்வேறு அரசியல் கட்சிகளை சார்ந்தவர்களாக இருந்தாலும் முஸ்லிம் சமூகத்தின் குரல்களாக ஒலித்துக்கொண்டிருந்தனர். ஆனால் இம்முறை முஸ்லிம் சமூகத்தின் அதிகப்படியான ஆதரவு தேசிய மக்கள் சக்தியான ஜே.வி.பி. யின் பக்கம் திரும்பியதால் இந்த பிரதிநிதித்துவத்தை இழக்க நேரிடலாம் என்ற அபாய அறிவிப்பு தென்படுகின்றது.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து அக்கட்சிக்காக வாக்கு வேட்டையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் ஆதரவாளர்கள், மற்றும் மௌலவிமார்கள் போன்றவர்களுக்கு இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் இன்று வரையில் பாராளுமன்றத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்வதற்காக எடுத்த முயற்சிகள், கடந்த காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த முஸ்லிம் பிரதிநிதிகள் செய்த முஸ்லிம் சமூகம் சார்ந்த சேவைகள், தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள் என்ன, அவற்றின் முக்கியத்துவம் யாவை என்ற ஆழமான அரசியல் வரலாற்றை சரியாக புரிந்துகொள்ள முடியாதவர்களாக உள்ளனர்.

எமது முன்னோடி முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இந்த நாட்டிற்காக எதுவும் செய்யவில்லை என்ற மிக மோசமான நச்சுக் கருத்துக்களால் இன்றைய இளைஞர்கள் மிக மோசமாக கவரப்பட்டுள்ளனர். பொதுவாக பார்க்கின்ற போது இலங்கையின் அரசியல் போக்கில் 1915 ஆண்டு சிங்கள முஸ்லிம் கலவரம், 1956 ஆம் ஆண்டு கலவரம், மாவனல்லை கலவரம், திகனை கலவரம், அலுத்கம கலவரம், மினுவாங்கொடை கலவரம் போன்ற கலவரங்களையும் அதனால் முஸ்லிம் சமூகத்தின் பொருளாதாரத்திற்கும் இருப்புக்கும் ஏற்பட்ட அழிவுகள், நாசகார நடவடிக்கைகளை நாம் ஒருபோதும் மறந்த நிலையில் நிகழ்காலத்தை திட்டமிட முடியாது. முன்னைய வரலாற்றை சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகத்திற்காக பேசுவது, பலமாக குரல் எழுப்புவது, முஸ்லிம் சமூகத்திற்கான தனியார் சட்டங்கள், நடை, உடை, கலை, கலாசாரம், அனைத்தையும் இனவாதமாக பார்க்கின்ற அரசியல் சித்தாந்தம் பிற்காலத்தில் எமது இருப்புக்கும் உரிமைகளுக்கும் உத்தரவாதமளிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் என்.பி.பி. க்கு வாக்கு கேட்கும் ஒரு சில முஸ்லிம் ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்படுகின்ற பிரச்சாரங்கள் கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் இருந்த ரவுப் ஹக்கீம், ரிசாத் பதியுத்தீன், முஜீபுர் ரஹ்மான், மரிக்கார், கபீர் ஹாசிம் உட்பட முஸ்லிம் பிரதிநிதிகள் முஸ்லிம் சமூகத்திற்கு நெருக்கடிகளும் ஆபத்துக்களும் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட எல்லா சந்தர்ப்பங்களிலும் பலமான குரல்களாக இருந்து வந்துள்ளனர்.

என்.பி.பி. காரர்கள் சொல்வது போன்று பாராளுமன்றத்தை சுத்தமாக்க இடமளிக்க முடியாது. அவர்கள் சுத்தமாக்குவதென்பதன் அர்த்தம் பாராளுமன்றத்தை சிவப்பு பாராளுமன்றமாக்கி ஒரே இனத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளால் நிரப்புவதாகும். 75 வருட கால சாபம் என்பதும், பாராளுமன்றத்தை சுத்தப்படுத்த வேண்டும் என்பதும் ஒருவகையில் முஸ்லிம் சமூகத்தின் பலமான குரல்களை ஒழித்துக்கட்டி அரசியல் அனாதைகளாக மாற்றும் திட்டமும் என்பதை எமது சமூகம் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆண்டு காலப்பகுதி வரையில் முஸ்லிம் சமூகம் இனரீதியாக எதிர்நோக்கிய அச்சுறுத்தல்கள் நெருக்கடி நிலைமைகளின் போது எமது முஸ்லிம் அரசியல் வாதிகளாகிய முஸ்லிம் தலைவர்களான ரிசாத், ஹக்கீம், கபீர் ஹாசிம் போன்றவர்களது குரல்கள் இந்த நாட்டில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியாகவும் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் சமூகத்திற்கான ஆபத்துக்களையும் நெருக்கடிகளையும் கொண்டு சென்று இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களையும் அவதானத்தையும் ஈர்க்கச் செய்வதற்கு உதவியதை நாம் மறந்து விட முடியாது.

எதிர்காலத்திலும் இதே தேவை எமக்கு வரலாம். என்.பி.பி.யில் இருந்து 22 மாவட்டங்களுக்கும் 25 முஸ்லிம் வேட்பாளர்களை களத்தில் இறக்கி இருப்பதை பார்த்து முஸ்லிம்கள் அவர்களால் முஸ்லிம் சமூகத்திற்காக குரல் எழுப்ப முடியும் என்று நம்பி ஏமாந்தவர்களாக இருக்கின்ற தலைவர்களை வீட்டுக்கு அனுப்ப முயற்சி செய்வது பாரிய மடமை என்றே கருத முடிகின்றது. அரசனை நம்பி புருசனை கைவிட்ட நிலை வரக்கூடாது. ஆட்சி முழுமையாக ஜே.வி. பி. வசமானதாக மாறினாலும் எதிர்க்கட்சியில் இருந்து எமது சமூகத்ததிற்காக குரல் கொடுக்கவல்ல முதுகெலும்புள்ள, ஆற்றல், திறமை, மொழி வல்லமை, ஆளுமை பூரணமான அரசியல் அனுபவம் மிக்க அரசியல் தலைவர்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும். அதனால் இந்த தேர்தலில் ஆவேசமும் அவசரமும் காரணமாக நாம் எமக்கே தீங்கை இழைத்துக் கொள்ளக் கூடாது.

இன்றைய சூழ்நிலையில் அனைத்தையும் பூச்சியமாக காட்டி பாராளுமன்றத்தை சுத்தம் செய்து 225 பேரும் புதியவர்களாக வரவேண்டும் என்பதன் முழுமையான அர்த்தம் புதிதாக அமையும் என்.பி.பி. ஆட்சியில் எதைச் செய்தாலும், எவ்வாறான பாதகமான சட்டங்களை கொண்டு வந்தாலும் அதுபற்றிய பின்விளைவுகள் குறித்த பொதுமக்கள் அபிப்பிராயங்களை கட்டியெழுப்பக்கூடிய வல்லமை மிக்க தலைவர்கள் இல்லா விட்டால் அத்தகைய ஆட்சியால் வருகின்ற மோசமான விளைவுகளை வெளிப்படுத்த ஆளில்லாத நிலை ஏற்படலாம். தற்செயலாகவாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமும் கிடைத்தால் அது மேலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம். அரசியல் அமைப்பு மாற்றத்தோடு ஒரே நாடு, ஒரே சட்டம், இன அடிப்படையிலான சிந்தனை இல்லை, அடையாளங்கள் வேண்டாம் என்ற கொள்கையும் அரசியல் கோட்பாடும் ஏற்கனவே மியன்மார், சீனா போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் அனுபவிக்கின்ற மோசமான நிலைமைகளை இலங்கை யிலும் அனுபவிக்க நாமே எமக்கு வழியை ஏற்படுத்திக் கொண்டவர்களாக பின்னர் கைசேதப்படுவதில் அர்த்தம் இல்லை.

ஆழமாக சிந்தித்து எமது சமூகத்தின் குரல்களாக இருப்பவர்களது வெற்றியையும் உறுதிப்படுத்த வாக்களிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு எமக்கு இருக்கின்றது. கண்டி மாவட்டத்தில் ரவுப் ஹக்கீம் உட்பட முஸ்லிம் பிரதிநிதிகள், கேகாலை மாவட்டத்தில் பன்முக ஆளுமையாக இருந்து வருகின்ற ஒரே முஸ்லிம் அரசியல் தலைவர் கபீர் ஹாசிம், கொழும்பு மாவட்டத்தில் முஜீபுர் ரஹ்மான், மரிக்கார் வன்னியில் ரிசாத் பதியுத்தீன் உட்பட கிழக்கு மாகாணத்திலும் பலமான முஸ்லிம் குரல்கள் அவசியம் என்பதை நாம் சரியாக உணர்ந்தவர்களாக இந்த தேர்தலில் எமது வாக்குகளை பயன்படுத்த வேண்டும்.



# கிராமப்புற முஸ்லிம்களும் ஹஜ்ஜை நிறைவேற்றும் வகையில் திட்டம் வகுக்க அரசு கவனம் செலுத்தும்!

## அமைச்சர் விஜித ஹேரத் நம்பிக்கை வெளியீடு



முஸ்லிம் சமூகத்தின் ஐந்து கடமைகளில் ஹஜ் யாத்திரையும் ஒன்று. அந்தப் பொறுப்பை நிறைவேற்றும் போது, அந்த வாய்ப்புகள் சலுகை விலையில் மக்களுக்கு கிடைக்க வேண்டும். மேலும், கொழும்பிலும் கிராமப்புறங்களிலும் வாழும் முஸ்லிம் சமூகத்தினரும் புனித ஹஜ் யாத்திரை நடவடிக்கைகளில் பங்குபற்றும் வகையில் திட்டம் வகுக்கப்பட வேண்டுமெனவும், இது தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்படும் எனவும்புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் ஹஜ் யாத்திரையை ஏற்பாடு செய்யும் முகவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கும் போது,

ஹஜ் யாத்திரையை ஏற்பாடு செய்யும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் முன்வைக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்காலத்தில் ஹஜ் தொடர்பான நடவடிக்கைகளை மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்தில் பரப்பப்படும் அவதூறுகள் குறித்தும் கருத்து தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் அனைத்து மத நம்பிக்கைகளும் அனுமதிக்கப்படுவதாகவும், இதில் எந்த தடையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரோ அல்லது பின்னரோ இஸ்லாமிய திருமண விதிகளை மாற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை எனவும், சமூக வலைத்தளங்கள் ஊடாக உலாவரும் ஒவ்வொரு அமைப்பின் கருத்தும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கருத்து அல்ல எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் சவூதி அரசினால் இலங்கைக்கு வருடாந்தம் வழங்கப்படும் ஹஜ் கோட்டா விநியோகம் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், 2004ஆம் ஆண்டு அமைச்சரவை அமைச்சராக இருந்த போது முஸ்லிம் பெண்களின் பாடசாலைச் சீருடைக்கு ஹிஜாப் தைக்கத் தேவையான துணியை ஒதுக்குவது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் தேவையான பணிகளைச் செய்திருந்தமையும் நினைவுகூரப்பட்டது.

இதன்போது, மத கலாசார அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, புத்தசாசன. முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ். எம். நவாஸ், இலங்கை ஹஜ் குழு தலைவர் இப்றாகீம் அன்சார் மற்றும் உறுப்பினர்கள், திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்கள், திணைக்கள அதிகாரிகள், அமைச்சின் அதிகாரிகள் எனப் பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.



களுத்துறை மாவட்டம் பேருவளையில் பிரதமர் ஹரினி அமரசூரிய தலைமையில் ஞாயிறன்று நடைபெற்ற கூட்டத்தில் என்.பி.பி. கட்சியின் தேசிய பட்டியல் அபேட்சகர் தொழிலதிபர் இக்ராம் பதாஹ் உரையாற்றுவதனைப் படத்தில் காணலாம். (எம்.எஸ்.எம்.ஸாகிர்)




# வாசிப்பின் வாழ்வியல் பயன்கள்

மனிதனாகப் பிறந்தவன் ஏன் வாசிக்க வேண்டும் என்பதற்கு எண்ணற்ற நியாயங்களை சமயம் சமூகவியல் உளவியல் வாழ்வியல் வரலாற்றில் நடப்பியல் சார்ந்து அடுக்கிக் கொண்டே போகலாம்.

மனிதன் சிந்திக்கின்ற பிராணி உலகை வளப்படுத்துகின்றவன் மனிதன் அவன் புதுமைகளை விரும்புகின்றான் புத்தாக்கங்களை படைக்க விரும்புகின்றான். அதை நோக்கி இந்த உலகை வடிவமைக்க தயாராக உள்ளான்.

இந்த உலகமும் நொடிக்கு நொடி தொழில்நுட்பம் டிஜிட்டல் என்ற பெயரில் கட்டுகதி வேகத்தில் மாறிக்கொண்டே வருகின்றது. மாற்றம் வரும் இந்த உலகத்திலே முன்னேற்றகரமான திருப்பங்களை மேற்கொள்ள அவனது சிந்தனை தயாராக இருக்க வேண்டும்.

அவனது சிந்தனையை சுயமாகவும் அது கடந்து பலப்படுத்தி மேம்படுத்தி சமநிலையில் சீராக நேர்த்தியாக வைத்துக் கொள்வதற்கு வாசிப்பு தான் அவனுக்கு அனைத்து வாயில்களையும் திறந்து கொடுக்கின்றது.

ஒரு முஸ்லிமைப் பொறுத்தளவில் வாசிப்பை வழக்கமாக மாத்திரம் அவன் சுருக்கிக்கொள்ள முடியாது அது அவனது வரலாற்றுப் பணியும் கூட கடந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களை நிகழ்காலத்தில் அவன் அமுல் படுத்தி எதிர்காலத்தை சிறப்பாக திட்டமிடுவதற்கு அவனுக்கு வாசிப்பு தான் துணை நிற்கும்.

வாசிப்பை துணைக்கு எடுத்துக் கொண்டவன் வழித்தடம் தவறாமல் முன்னோக்கி நகர்ந்து கொண்டே இருப்பான் அவனைப் பின்தொடர்பவர்களும் எந்தவிதமான இசகு பிசகுமின்றி தத்தமது பாதைகளில் தனித்துவமாக பயணிப்பார்கள்.

வாசிப்பு ஒரு பொழுது போக்கு அம்சம் அல்ல.

அது வளமான வாழ்வுக்கான வழிகாட்டி. வாசிக்க வாசிக்க வாழ்வு வளமாக மாறும். சிந்தனை சீராகும். கருத்துக்கள் பிறக்கும். கற்பனைகள் எழும். அறியாமை இருள் அகன்றுவிடும். அறிவை நோக்கிய அலாதியான ஈடுபாடு பெருகும். எம்மைச்சூழ நிகழும் மர்மங்கள் விலகும்.

நாங்கள் நினைப்பது போல வாசிப்பு குழந்தைகளுக்கு மட்டுமானதல்ல. பாடசாலை மாணவர்களுக்கானதுமல்ல.

இறுதித் தூதர் முஹம்மதை (ஸ ல்) அவர்களை அல்லாஹ் இறுதி நபியாக அகிலத்துக்கான தூ தை சுமந்து வரும் அகிலத்தின் அருளாகவே தெரிவு செய்யும் போது அவருக்கு வயது நாற்பது.

இறைவன் ஏவிய முதல் வசனம் “வாசிப்பீராக” அதற்கு நபியவர்களது பதில் எனக்கு வாசிக்க முடியாது என்பது தான்.

ஆனாலும் எழுத்தும் வாசிப்பும் வாழ்வும் படைத்த இறைவனும் பின்னிப்பிணைந்தாற் போல அதனையே முதல் ஐந்து வசனத்திலும் இறைவன் மீள மீள வலியுறுத்தி கூறி அழுத்தமாகவே அதன் எல்லையற்ற செயற்பாட்டுக்கு தூண்டுதல் தருகின்றான்.

நாற்பது வயது கடந்தும் வாசிக்க வேண்டும். வாசிக்க முடியாவிட்டால் முயற்சி செய்து வாசிக்க வேண்டும்.

படைத்த உமது இரட்சகனின் பெயரை வைத்து வாசிப்பீராக என்பது இந்த உலகில் உயிர் வாழும் வரை வாசிப்பீராக என்று அர்த்தம் கொள்ளலாம்.

வாசிப்பு என்பது கற்றலுக்கான முதலீடு கற்றலுக்கான நுழைவாயில் சிந்தனைக்கான அச்சாணி வாழ்நாள் நீடித்த கல்வி என்பது வாழ்நாள் முழுக்க வாசிப்பதற்கு தானே சொல்லப்படுகிறது.

அதுதான் இன்று வேறு வார்த்தையில் வாழ்நாள் நீடித்த கல்வியாக பரிணாமம் பெற்றுள்ளது டகைந பழபெ நனரஉயவழைெ

முதல் கட்டளை வாசிப்பீராக என்பது தான் மிகப்பெரும் தெய்வீக ஆற்றலை மனித சிந்தனைக்கு அது தந்திருக்கின்ற சுதந்திரத்தை சுட்டிக்காட்ட போதுமானதாக இருக்கிறது.

எனவே குழந்தைகளுக்கு முதலில் பழக்க வேண்டியதும் வாசிப்புதான்.

காரணம் இஸ்லாத்தில் தொழுகையை ஏவுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆரம்ப வயதெல்லை 7 மூன்று வருடங்கள் அதற்கு பயிற்சி தர வேண்டும்.

ஆனால் வாசிப்பு பழக்கம் அதனை விடவும் முந்தியது. காரணம் சுமார் ஆறு வயதில் பிள்ளைகள் பாடசாலைக்கு உள்வாங்கப்படுகின்றனர். எனவே பருவா வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அமைவான அளவில் வாசிப்பு பயிற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வாசிப்பு எப்போதும் வணக்கமாக அமைந்து விடுகிறது. அது நிதானத்தை நிம்மதியை தருகிறது. வாசிப்பால் நீண்ட காலம் கூட வாழ முடியும்.

எமது சமூகம் வாசிப்பை விட்டும் ஏன் தூரமாகி விலகி இருக்கின்றது...

அது வாசிப்பு அமல் என்பதை இன்னும் விளங்கவில்லை

விளக்கினாலும்

ஏற்றுக்கொள்ள தயாரில்லை

அது ஜீரணிப்பது மில்லை.

பசிக்க வாசிக்க வாழ்வும் வாழ்க்கை தளமும் வாழ்க்கை பற்றிய பார்வையும் அகன்று விரிகின்றது வாசிக்கின்றவன் வாழ்வை ரசிக்கக் கற்றுக் கொள்கின்றான். வாசிக்கின்றவன் வாழ்வை புரிய கற்றுக் கொள்கின்றான். வாசிக்கின்றவன் வாழ்வுக்கான அர்த்தத்தை பெற்றுக் கொள்கின்றான். வாசிக்கின்றவன் வரலாறு படைக்கின்றான். வாசிக்கின்றவன் வளமான வாழ்வை வாழ்கின்றான். வாசிக்கின்றவன் தன் ஆன்மாவை மேம்படுத்திக் கொள்கின்றான். சிந்தனையை சிறப்பாக கட்டமைத்துக் கொள்கின்றான். ஒவ்வொரு விடயத்தையும் அலசி ஆராய்ந்து பார்த்து நுணுக்கமாக சிந்தித்து முடிவெடுக்க கற்றுக் கொள்கின்றான் பயிற்சி பெறுகின்றான். கடந்த காலங்களில் இருந்து பெற்றுக் கொண்ட பாடங்களை படிப்பினைகளை நிகழ்காலத்தில் நடைமுறைப்படுத்தி எதிர்காலத்தில் சறுக்காமல் விழாமல் இருப்பதற்குரிய ஏற்பாடுகளில் செய்து கொள்கின்றான்.






**நாச்சியாதீவு பர்வீன்**

– முஜாமலா –

மருதமுனை பல எழுத்தாளுமைகளைச் சுமக்கும் பூமி.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பெயர்கூற அறியப்படும் எழுத்தாளர்களின் தரமான வரிசை அங்குள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் மருதமுனை மாஹிறா வின் ”மனதின் மாயம்” அண்மையில் எனக்குக் கிடைக்கப்பெற்றது.

அவரது முதல் தொகுதி இதுவாகும்.

நீண்ட முயற்சிக்குப் பிறகு கிடைத்த உந்துதலினால் மாஹிறா தனது கன்னி நூலை நமக்கு அறிமுகம் செய்திருக்கிறார்.


ஆனால் மாஹிறா மிக நீண்ட காலமாகவே எழுதி வருபவர் என்பதை தனது உரையில் உறுதிப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக 1985 இருந்தே தான் எழுதத் தொடங்கிய ஞாபகங்களைப் அங்கு அவர் பதிவாக்கியுள்ளார்.

தனக்குள் ஏற்படும் உணர்வுகளின் தாக்கங்களை கவிதையாக புனைவதாக கூறியுள்ள இவர்.

அவை அவருக்கான பெரும் வலி நீக்கி மாத்திரைகளாக இயங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மனதின் மாயம் மொத்தமாக 100 கவிதைகளை உள்ளடக்கி 232 பக்கங்களுடன்




வெளிவந்திருக்கிறது.

மாஹிராவின் கவிதைகள் கவலை ஏக்கம் ,துடிப்பு ,வலி, தாக்கம் ,தவிப்பு ,அன்பு ,நட்பென ஆயிரம்

வாழ்வியல் மயக்கங்களை கட்டவிழ்க்கும் மனமாக அது செயற்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

“கொடுமை” என்ற கவிதையில் சிலருக்கு எதையும் இரவலாய்

வேண்டியே பழக்கம்..
எதையும் திருப்பிக் கொடுக்க
தேவையில்லை என்று...

வாசகனின் சிந்தனைப்பாங்கை ஏவிவிடும் மாஹிறா இயல்பான எழுத்துத் தளமென்றை வாசகன் முன் காட்சியாக விவரிக்கிறார்.

இவ்வாறு சமூக அவலத்தை நோக்கி கல்லெறியும் இவர்.

“அழும் தேசமேனும் ” கவிதையில்
என் தேசத்தின் மீது
யாரோ ...!
கல்லெறிந்து போனார்கள்....ஃஃஃ
என்று அறம் பாடுகிறார்.

இப்படி எளிமைப் படிமம் வந்து விழும்போது பாடுபொருள் வாசகனுக்கு மகிழ்ச்சியளிக்கும் சுவை என்றே கூறலாம்.

இன்னும்
“அழகு ” கவிதை
கடலுக்கு அலை அழகு
வானத்துக்கு நிலவழகு
மேகத்திற்கு மின்னல் அழகு...

மனிதருக்கு நட்பழகு என்று அழகைச் சொற்களில் நிரப்பிக் காட்டுகிறது என்றே சொல்லத் தோன்றுகிறது.

மேலும் தனது பிரதேச தொழிலான நெசவுத் தொழில் பற்றியும்

மனதின் மாயத்தின் 63 பக்கத்தில் பதித்துள்ளார்.

இவ்வாறு தன்னைச் சூழ்ந்த சமூகம் தொடர்பான வேண்டுதல்களை பல கவிதைகளில் வெளிப்படுத்தியும் உள்ளார்.

இவரது கவிதைகளில் அனேகமானவை வானொலிக்கு எழுதப்பட்ட கவிதைகள் என்பதால் பிரச்சாரம் மற்றும் அறிவித்தலின் பன்முகைமையாகவே நிறையப் படைப்புகள் பதியப்பட்டுள்ளன.

இதே விடயத்தை அணிந்துரை வழங்கிய கலாநிதி சத்தார் எம். பிர்தொளஸ் அவர்களும் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இன்னும், வாழ்க்கை குறித்தான காலத்தின் நெருக்குதலை மொழியில் வடிவமைக்க முயலும் மாஹிராவின் இன்றைய ”மனதின் மாயம் ” அவரது வலிகளுக்கு நிவாரணி என்ற பொருளில் வளர்த்தெடுப்போம்.

அது அவரது தீராத வாசிப்பையும் தொடரான எழுத்தின் நாட்டத்தையும் வளர்த்து நிச்சயமாக அவரை மிகப் பெரும் ஆளுமையாக வளர்த்தெடுக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

# பண்பறிவு

பா எழுத்தில்
பழங்கயொன்று பாட
பல புத்தகம்
படித்தேன் சிரமம்
பாரது
பலரிடம் ஆலோசனை
பல கேட்டேன்
பாடவுள்ள கவி பற்றி
பத்து மாதம் சுமந்து
பல வலிகளுடன்
பாச தாயின் பிரசவம் போல
பண்பான கவிதைகளை
பாரில் பிரசவித்தேன்
பழைமையுடன் வாழ்கையில்
பல வருடங்கள் கடக்க
பாரில் மாற்றங்கள் நடக்க
பா எழுத்தில்
பாவின கவிதை எழுத
பாரில் நேர மின்றி
பயணத்தில்
பா எழுத்தை இணையத்தில்
பதிவு செய்து
பாடிய செயற்கை நுண்ணறிவு
பழைய புதுக்கவிதை இது

பல ஆளுமைகளை
பக்குவமாய் தம்வசப்படுத்தி
பல சாதனை புரியுது
பாரில் செயற்கை நுண்ணறிவு

பாரில் - நற்
பண்புகள் இல்லாதவிடத்து
படைக்கும் செயற்கையறிவும்
பண்பின்றி வளர்ந்து
படை எடுக்கும்
பாரை அழிக்க

பாரை அழித்திடாது
பண்புகள் வளர
படைப்போம்
பாரில் செயற்கை
நுண்ணறிவை
பல்கலைக்கழக மாணக்கரே

– இப்னு அஸாத் –

# அல்லலுறும் மறக்கடிக்கப்பட்ட மத்திய ஆபிரிக்க மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட உலகையே ஒன்றுதிரட்டிய சவூதி அரேபியா!

சுமார் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு முன் செழிப்பாக இருந்த ஒரு பிரதேசமே மத்திய ஆபிரிக்க நாடுகளாகும். அந்நாடுகளின் செழிப்புக்கு உயிரோட்டமாகவும் அடிப்படை வளமாகவும் இருந்ததே “சாட் ஏறி“ (Tchad Lake) என்றழைக்கப்படும் பாரிய குளமாகும். ஆபிரிக்கக் கண்டத்தின் முத்தாகவும் உயிர்நாடியாகவும் கருதப்படும் இந்தப் பாரிய குளத்தினைச் சுற்றி மில்லியன் கணக்கான பல நாட்டு மக்கள் வாழ்கின்றனர். நைஜீரியா, சாட், கமரூன், நைஜர் ஆகிய நாடுகள் இப்பாரிய குளக்கரையில் சங்கமிக்கின்றன.

பல தசாப்த காலமாக இப்பிரதேசத்தில் நிலவிவரும் போர்கள், அரசியல் பிரச்சினைகள் மற்றும் காலநிலை மாற்றங்களினால் இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பல மனித அவலங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இவ்வவளங்களின் தாக்கம் இந்நான்கு நாடுகளையும் தண்டி அவற்றின் அயல்நாடுகளான ஆபிரிக்கக் கரையோரத்திலுள்ள அனைத்து நாடுகளையும் பாதித்து பல மில்லியன் கணக்கான மக்கள் பசி பட்டினியுடன் அடிப்படை வசதிகளின்றி அல்லல்படும் சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலைக்கான பிரதான காரணிகளாக இரண்டு காரணிகள் சமூக மற்றும் புவியியல் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றது.

ஒன்று: இடைவிடாத மனிதக் குழப்பங்களும் போர்களும் இந்நாடுகளை சின்னாபின்னப்படுத்தி மக்களை அகதிகளாகியுள்ளன.



இரண்டு: இப்பிரதேசத்தின் உயிரோட்டமாக இருந்த “சாட் ஏறி“ யில் ஏற்பட்டுள்ள வறட்சியும் காலநிலை மாற்றமும். அதாவது 1963 காலப்பகுதியில் சுமார் 25000 சதுர கி. மீ பரப்பளவான பகுதியில் தேங்கியிருந்த நீர் 2000 மாம் ஆண்டளவில் வெறும் 1500 சதுர கி. மீ என்றளவுக்கு குறைந்தது. மீண்டும் 2008 காலப்பகுதி தொடக்கம் நீர் மட்டம் சற்று அதிகரித்தாலும் அதிகரித்துவரும் மக்கள் தொகைக்கேற்பவும் குறிப்பாக அதிகரித்துவரும் அகதிகளின் தொகைக்கேற்பவும் ஈடுகொடுக்கமுடியாமல் அப்பகுதி மக்கள் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஐ. நா. சபையின் அறிக்கைகளுக்கமைய் உணவுப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, நீர்வசதிகள் மிகவும் குன்றிய பிரதேசங்களாக இப்பிரதேசங்கள் அடையாளமிடப்பட்டுள்ளன.

மேலும் உத்தியோகபூர்வ ஆய்வுகளின் படி சுமார் 11 மில்லியன் அகதிகள் அடங்கலாக 33 முப்பத்து மூன்று மில்லியன் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அவசர மனிதநேய உதவிகளுக்கு தேவையுடையோராக இருக்கின்றனர்.

இவ்வளவு மனித அவலங்களுக்குமதியில் வாழும் இம்மக்களின் தேவைகளை நிவர்த்திசெய்வதற்கு உலக வல்லரசுகளோ் சர்வதேச அமைப்புகளோ முறையான திட்டங்களை முன்வைக்காத நிலையில் சவூதி அரேபியா் இம்மக்களுக்கான உதவிகளை செய்வதற்காக வேண்டி பல உலக நாடுகளை ஒன்று திரட்டி சென்ற சனிக்கிழமை ஒக்டொபர் 26 ஆம் திகதி ஒரு பாரிய சர்வதேச உச்சிமாநாடொன்றினை ஜித்தா மாநகரில் நடாத்திமுடித்துள்ளது. “சாட் ஏறி மற்றும் கரையோர நாடுகளில் அல்லல்படும் அகதிகள், இடம்பெயர்ந்தவர்களுக்கு




உதவிக்கரம் நீட்டும் நாடுகளுக்கான உச்சி மாநாடு“ என்பதே இவ்வுச்சி மாநாட்டின் மகுடம் ஆகும்.

உலகளாவிய மனித நேய உதவிகளுக்கான மன்னர் சல்மான் நிலையத்தின் பூரண ஏற்பாட்டுடன் நடைபெற்ற இவ்வுச்சி மாநாட்டிற்கு் இஸ்லாமிய கூட்டுறவு நாடுகளின் அமைப்பு (IOC), அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் (UNHCR), மனிதாபிமானப் பணிகளை ஒருங்கிணைக்கும் ஐக்கிய நாடுகளின் பணிமனை (OCHA) போன்ற சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் உற்பட் உதவிக்கரம் நீட்டும் அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளும் பிரசன்னமாகியிருந்தனர்.

அவசர உதவிகள் தேவையுடைய மேற்படி ஆபிரிக்க நாடுகளுக்கு உதவும் முகமாக் இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மானின் நேரடிப் பணிப்புரையின் பேரில் சவூதி அரேபியா 51 மில்லியன் அமெரிக்க டாலர்களை, (14 பில்லியன், 891 மில்லியன் இலங்கை ரூபாய்கள்) வழங்குவதாக உச்சிமாநாட்டில் அறிவித்தது இங்கே குறிப்பிடத்தக்க விடயமாகும். அதனைத் தொடர்ந்து பல நாடுகளும் தங்களின் பங்களிப்புகளை அறிவித்தன.

உலகளாவிய மட்டத்தில் வசதிபடைத்த நாடுகள் தலையிட்டு இப்படிப்பட்ட இன்னல்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்ட இவ்வுச்சி மாநாட்டில் மொத்தமாக 1.1 பில்லியன் (ஒரு பில்லியன் மற்றும் 100 நூறு மில்லியன்) அமெரிக்க டாலர்கள், (321.2 பில்லியன் இலங்கை ரூபாய்கள்) சவூதி அரேபியாவுடன் கைகோர்த்த நேச நாடுகளின் பங்களிப்புடன் உதவித் தொகையாக ஒன்று சேர்ந்தது இவ்வுச்சி மாநாட்டின் பாரிய வெற்றியினைக் குறித்து நிற்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சளைக்காது தொடர்ந்தும் மனிதநேயப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் சவூதி அரேபியாவின் பணிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவும் சாதனையாகவும் இம்மாநாட்டினை நோக்கலாம். மேலும் “சாட் ஏறி மற்றும் கரையோர நாடுகளின்“ முக்கிய தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்து அங்கே மனிதம் வாழும் சூழலை ஓரளவாவது பூர்த்தி செய்யும் பயணத்தின் முக்கிய திருப்புமுனையாகவும் இம்மாநாட்டின் வெற்றி இருக்குமென்பதில் ஐயமில்லை.



**கலாநிதி அம்ஜத் ராஸிக்**

## மனநலமும் ஆலோசனையும் 52

# மனிதர்களை மனிதர்கள் படைக்கவில்லை

மனிதனை மிகச் சிறந்த அமைப்பில் படைத்திருக்கிறான் இறைவன். சிறந்த அமைப்பு என்பது அழகான தோற்றமும், பொன்னிறமும் அல்ல.

மாறாக, உடல் அமைப்பும் அதன் செயல்பாடுகளும் சிறந்த அமைப்பில் உள்ளன என்று பொருள்.

செல்வத்தைப் போன்றே அழகையும் நாடியவர்களுக்கே அல்லாஹ் கொடுக்கிறான். ஏன் என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த நுட்பம்.

அழகு... கொண்டாடப்பட வேண்டிய ஒன்றே அல்ல. அழகாக இருப்பவர் ஒழுக்கமற்றவராக இருந்தால் அது அவருக்கு எப்பயனையும் தராது. நரகத்தின் எரிபொருளாகத்தான் மாறுவார்.

லுக்மான் (அலை) பிறப்பால் கறுப்பின அடிமை.

பிலால் (ரலி) மனிதர்களிலேயே கறுப்பானவர்.

ஆனால் வரலாற்றில்..? இருவருமே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டார்கள். ஒருவர் விவேகத்தின் தந்தையாக இருந்தார். மற்றொருவர் புனித கஅபாவுக்கு மேல் ஏறி நின்று பாங்கு சொன்னார்.

இப்னு மஸ்ஊத் (ரலி) அழகற்ற தோற்றம். ஒல்லியான தேகம். ஆனால் மறுமையில்...?

"மீஸான் தராசில் அவரது பாதங்கள் மட்டுமே உஹத் மலையைவிட அதிக பாரமாக இருக்கும்" என்றார்கள் நபி (ஸல்).

ஜுலைபீப் (ரலி) பார்க்கவே பயங்கரமான முகத்தோற்றம். ஆனால் உஹதில்..?

"ஜுலைபீப் என்னைச் சார்ந்தவர், நான் அவரைச் சார்ந்தவன்"" என்று நபி (ஸல்) கூறினார்கள்.

எனவே யாருடைய தோற்றத்தையும் உருவத்தையும் கிண்டலடிக்க வேண்டாம். காரணம் மனிதர்களை மனிதர்கள் படைக்கவில்லை.

படைப்புகளுக்குக் கண்ணியம் கொடுக்காவிட்டாலும் படைத்தவனுக்குக் கண்ணியம் கொடுங்கள்.

யாருடைய உடல் அமைப்பையும் வெறுக்காதீர்கள். கேலி பேசி சிரிக்காதீர்கள். ஏனெனில்,

அல்லாஹ் கூறுகின்றான்: "நிச்சயமாக நாம் மனிதனை மிகச் சிறந்த அமைப்பில் படைத்தோம்"". (திருக்குர்ஆன் 95:04)

– நூஹ் மஹ்ழரி

**இந்த நெஞ்சம் தொடும் வரிகளுக்கு என் நெஞ்சில் வரும் சிறு வரிகள்...**

நான் படித்ததில் என் உள்ளத்தை மிகவும் ஆழமாக ஈர்த்த விடயங்களில் மேலேயுள்ள நூஹ் மஹ்ழரி அவர்கள் எழுதியுள்ள வரிகளை காண்கிறேன். இதை அழகாக வடிவமைத்து வெளியிட்ட சகோதரருக்கு அல்லாஹ் உயர்ந்த கூலிகளை கொடுக்க வேண்டும்.

மனிதனின் உடல் தோற்றத்தை தாண்டிய ஏதோ பல நற்குணங்கள், பெறுமானங்கள், தனித்துவமான இயல்புகள், எல்லாவற்றையும் விட அல்லாஹ் அவனுக்கென்றே கொடுத்திருக்கும் உயர்வான அருள்கள்

மனிதனை இறை பிரதிநிதியாக தெளிவுபடுத்திக் காட்டுகின்ற அற்புதங்களாகும்.

இதை புரியாமல் இருப்பது எமது பலவீனமாகும்.

ஒரு மனிதனை குறைகாண, மற்ற மனிதனுக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை.

கட்டை, நெட்டை, வெள்ளை, கருப்பு,

பருமன், மெலிவு போன்ற வித்தியாசங்களையும்

உள, உடல் குறைபாடுகள், நோய்கள் போன்றவற்றையும்...

அவை ஏன்..! எதற்கு..! என்று விளக்கம் கொடுக்கும் உரிமையை இறைவன் எந்த மனிதனுக்கும் கொடுக்கவில்லை.

காரணம் மனிதனின் தோற்றத்தை தாண்டிய மேன்மைக் குணங்கள் அவனுக்கு உரிமையாக தரப்பட்டுள்ளது என்பதால்.

சில மனிதர்களின் உடல் தோற்றத்தை பார்த்து கிண்டலாக, கேலியாக, குறையாக, கேவலமாக விமர்சித்துப் பேசும் மனிதர்கள் இல்லாமல் இல்லை. அவ்வாறானவர்களை கண்டதுமே தலை திருப்பி சென்று விடுபவர்களும் உண்டு.

உடல் தோற்றத்தை விமர்சனம் செய்ததால் தங்கள் மீதே வெறுப்பும் கோபமும், குறை மதிப்பும் கொண்டு மன அழுத்தம் மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளான பலரை நாம் மனநல ஆலோசனையின் போது சந்தித்து இருக்கிறோம்.

ஒருவரின் உடல் தோற்றத்தை குறைகூறி அவரை மனநோயாளியாக ஆக்கிய அந்த பயங்கர பாவத்தை சுமக்கும் நபராக நாம் எவரும் இருக்கக் கூடாது. அது ஒரு சகோதரனுக்கு செய்யும் பெரும் துரோகமாக இருக்கலாம்.

மனிதர்களை மனிதர்கள் படைக்கவில்லை என்று இங்கு குறிப்பிட்டுக் காட்டும் அழகான கூற்று..

எங்கள் மனங்களுக்கு மன பாரங்களில் இருந்து விடுதலை பெற்றுத் தருகிறது.

எங்களை பயனும் பெறுமதியும் நிறைந்த மனிதர்களாக பார்க்க வைக்கிறது.

மனதுக்கு அருமருந்தாக இருக்கிறது.

உடல் தோற்றத்தை தாண்டிய சகோதரத்துவம் எங்கள் நெஞ்சங்களில் இருந்து ஊற்றெடுக்கட்டும்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**




**பயாஸா பாஸில்**



# யாரையும் "காயப்படுத்தாதீர்கள்"

நீங்கள் உண்மையிலேயே யார் என்று புரிந்து கொள்ளாத ஒருவரைப் பிடித்துக் கொண்டிருப்பதை விட சில நேரங்களில் அவர்களை கைவிட்டு முன்னே செல்வது நல்லது.

நீங்கள் அவர்களுடன் இல்லாததன் வலியை அவர்கள் உணரும் நேரம் கண்டிப்பாக வரும் உங்கள் முக்கியத்துவம் ஒருநாள் கண்டிப்பாக புரியும்.

உங்களுடன் தொடர்ந்து பயணம் செய்யாத முடியாத, மதிப்பில்லாத அந்த உறவை நினைத்து நீங்களே உங்கள் இதயத்தை காயப்படுத்துவதை நிறுத்துங்கள்.

உங்கள் மீது அக்கறை கொள்ளும்படி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

உங்களுக்கு உண்மையாக இருக்கும்படி யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

உங்களுக்குத் பிடித்த நபராக இருக்க நீங்கள் ஒருவரைக் கட்டாயப்படுத்த முடியாது அவர்களாக இருக்க வேண்டும்.

உண்மை என்னவென்றால் சில சமயங்களில் நீங்கள் மிகவும் விரும்பும் நபர் உங்களுடன் இல்லாமல் போனாலே நீங்கள் சிறந்தவராக இருப்பீர்கள்.

உங்கள் வாழ்க்கையில் வரும் விஷயங்கள் எல்லாமே உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும் என்று நினைப்பதை நிறுத்துங்கள்.

சில விஷயங்கள் தோல்விகளை கொடுக்கும், சில பாடங்களை கொடுக்கும், சில வருத்தங்களை கொடுக்கும், சில போராட்டங்களை கொடுக்கும்.

அனைத்தும் கலந்ததே வாழ்க்கை.

அன்பை காட்ட நீங்கள் செய்யும் அனைத்திலும் கவனமாக இருக்க வேண்டும் உங்களிடம் இருக்கும் ஒன்றை இழந்து ஒன்றை பெற முயற்சிக்காதீர்கள்.

நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும் அன்பை திருப்பி செலுத்த தயாராக இல்லாத ஒருவரிடமிருந்து உங்களுக்குத் தேவையான உறவைப் பெற முடியாது.

நீங்கள் ஒருவரைச் சந்தித்து அவர்களால் காயமுற்று அவர் உங்களுக்கானவர் இல்லை என உணரும் போது அது கடினமாக இருக்கும்.

இரவில் தூங்குவதற்கு முன் நீங்கள் எத்தனை இரவுகள் அழுதாலும் இறுதியில் ஒருநாள் உங்கள் முந்தைய உறவிலிருந்து விடுபடுவீர்கள் மேலும் அடுத்து உங்களுக்கு என்ன தேவை என்பதை தெளிவாக கண்டுபிடிப்பீர்கள் உங்கள் முந்தைய உறவில் விஷயங்கள் ஏன் கைகூடவில்லை என்பதை உங்கள் எதிர்காலம் உங்களுக்கு புரிய வைக்கும்.

"தரமில்லாத உறவில் இருப்பதை விட தனிமையில் இருப்பது நல்லது."

அவர்கள் உங்களை அவர்களுக்கான ஒரு விருப்பப் பொருளாக மட்டுமே பார்த்தால் அவர்கள் உங்கள் வாழ்க்கையில் முன்னுரிமை பெறத் தகுதியற்றவர்கள்.

புரிந்துகொள்ளுங்கள் உங்களை பின் தொடராத ஒருவரை ஒருபோதும் நீங்கள் பின்தொடர வேண்டாம்.

உண்மையாகவே உங்களை நேசித்து இருந்தால் உங்கள் கண்ணில் கண்ணீரை வர விட மாட்டார்கள்.

உங்களுக்கு ஒன்று என்றால் துடித்துப் போவார்கள், தவித்துப் போவார்கள், தேடி ஓடி வருவார்கள்.

நீங்கள் வேண்டவே வேண்டாம் என்று விட்டு விட்டுச் செல்லும் போதே தெரிந்து கொள்ளுங்கள் அங்கே வேறு ஏதோ புது உறவு வந்து விட்டது அதனால் பழைய உறவு கசந்து விட்டது.

விருப்பமில்லாமல் விலகிச் செல்பவர்களை காரணம் கேட்டு கஷ்டப்படுத்தாதீர்கள்.

இதயம் கடந்து செல்வோம் இதுவும் கடந்து போகும்.

# நிம்மதியான வாழ்க்கை வேண்டுமா!

*நீங்களும் உங்கள் பாடும் என்று வாழப் பழகுங்கள்! மனிதர்களிடம் எதுவும் எதிர்பார்க்காமல், எதையும் வேண்டாமல் இருக்கப் பழகுங்கள். கொடுப்பதில்தான் கௌரவம் இருக்கிறது, கேட்பதால் தாழ்வும், இழிவுமே வந்து சேரும்.*

*உங்கள் சூழ்நிலைகள், எதுவாக இருந்தாலும் சுயமரியாதையை கைவிடாதீர்கள், போதுமென்ற மனமே பெரும் செல்வமாகும்.*

*இந்த உலகம் யாருக்கும் சுவனமாக ஆகப் போவதுமில்லை, யாருக்கும் நரகமாக ஆகப் போவதுமில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.*

*அறிஞர் இப்னு தைமியா அவர்கள் சொல்வதைக் கேளுங்கள்:*

*மனிதர்களிடம் நீங்கள் தேவை காணும் அளவுக்கு - அது ஒரு மிடறு தண்ணீராக இருந்தாலும் சரி, அவர்களிடம் உங்கள் மதிப்பும் மரியாதையும் குறைந்து விடும்.!*

**- Imran Farook -**





அரபாத் பஹுர்தீன்



## ஹொங்கொங் சிக்ஸர்ஸ்:

# பாகிஸ்தானை வீழ்த்தி சம்பியன் மகுடம் வென்றது இலங்கை

ஹொங் கொங் சிக்ஸ் தொடரின் இறுதிப் போட்டியில் பலமிக்க பாகிஸ்தான் அணியை 3 விக்கெட்டுகளால் வீழ்த்திய இலங்கை அணி 2ஆவது தடவையாக ஹொங்கொங் சிக்ஸர்ஸ் சம்பியன் பட்டத்தினை வென்று அசத்தியது.

சுமார் 7 வருடங்களுக்குப் பின்னர் இடம்பெற்ற சிக்ஸர் மழை பொழியும் ஹொங் கொங் சிக்ஸ் தொடரில் இம்முறை மொத்தம் 12 அணிகள் பங்கேற்றிருந்தன. அதில் நேபாளம் மற்றும் ஓமான் அணிகள் முதன்முறையாக இத் தொடரின் பங்கேற்றிருந்தமை விசேட அம்சமாகும். அந்தவகையில் ஒரு குழுவில் 3 அணிகள் வீதம் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு முதல் சுற்று லீக் ஆட்டமாக இடம்பெற்றது.

பின்னர் காலிறுதி இடம்பெற்று , தொடர்ந்து இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்திய பாகிஸ்தான் அணியும், 2ஆவது அரையிறுதிப் போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்திய இலங்கை அணியும் தொடரின் இறுதிப் போட்டிக்கு தெரிவாகின.

மொங் கொக்கில் நடைபெற்ற தொடரின் சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி பாகிஸ்தானை முதலில் துடுப்பாடப் பணித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களம் நுழைந்த பாகிஸ்தான் அணியின் துடுப்பாட வீரர்களை இலங்கைப் பந்து வீச்சில் மிரட்டி விரைவாகப் பெவிலியன் திருப்பினர். இதனால் பாகிஸ்தான் அணி 5.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 72 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் முஹம்மட் அக்ஹ்லாக் 20 பந்துகளில் 3 சிக்ஸர்கள் மற்றும் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 48 ஓட்டங்களை எடுத்தார்.பந்துவீச்சு





இலங்கை அணி சார்பில் தனன்ஞய லக்ஷான் மற்றும் தரிந்து ரத்நாயக்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின்னர் பாகிஸ்தான் அணியால் நிர்ணயிக்கப்பட்ட 73 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை அணிக்கு ஆரம்ப துடுப்பாட வீரரான சந்துன் வீரக்கொடி அதிரடி ஆட்டத்தை 13 பந்துகளில் 4 சிக்ஸர்கள் மற்றும் ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக 34 ஓட்டங்களை விளாசிக் கொடுக்க 5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றதுடன் 2ஆவது முறையாகவும் ஹொங்கொங் சிக்ஸர்ஸ் தொடரின் சம்பியன் மகுடத்தை வெற்றி கொண்டு அசத்தியது இலங்கை அணி. இவ் இறுதிப் போட்டியின் நாயகனாக பந்துவீச்சில் அசத்திய தனன்ஞய லக்ஷான் தெரிவு செய்யப்பட, தொடரின் சிறந்த வீரராக இத் தொடரில் 8 விக்கெட்டுக்களை வீழ்த்திய இலங்கை அணியின் சுழல்பந்துவீச்சாளரான தரிந்து ரத்நாயக்க தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மே.இ.தீவுகளை விரட்டியடித்து

# தொடரை சமன் செய்தது இங்கிலாந்து





சுற்றுலா இங்கிலாந்து அணிக்கும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் தீர்மானம் மிக்க 2ஆவது போட்டியில் லிவிங்ஸ்டனின் அதிரடிச் சதம் கைகொடுக்க 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரை 1:1 என சமன் செய்தது இங்கிலாந்து அணி.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் மற்றும் 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில், முதலில் ஆரம்பித்துள்ள ஒரு நாள் தொடரின் முதல் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றிருந்தது.

அதற்கமைய, 2ஆம் திகதி ஆன்ட்டி குவாவில் இடம்பெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் தொடுப்பெடுத்தாடும் வாய்ப்பை மேற்கிந்திய தீவுகள் வழங்கியிருந்தது.

அதற்கமைய துடுப்பாட்டக் களம் நுழைந்த மேற்கிந்தியத் தீவுகளின் ஆரம்ப வீரர்களான பிரண்டன் கிங் மற்றும் லிவிஸ் ஆகியோர் ஒற்றைய இலக்க ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினர். இருப்பினும் 3ஆம் மற்றும் 4ஆம் இலக்க துடுப்பாட்ட வீரர்களாக களம் புகுந்த கார்ட்டி மற்றும் அணித் தலைவரான ஷாய் ஹோப்ஸ் ஆகியோர் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி தமக்கிடையில் பெறுமதிமிக்க 143 ஓட்டங்களை பகிர்ந்தனர்.

இதில் கார்ட்டி 71 ஓட்டங்களுடனும், ஷாம் ஹோப்ஸ் 117 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க பின்னர் வந்த ரொத்தர்பேட் அதிரடியாக அரைச்சதம் கடந்து 54 ஓட்டங்களை பெற மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 328 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் டேனர் மற்றும் சாகிப் மொஹமட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் 329 என்ற சவால் மிக்க வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரரான சலாட் அரைச்சதம் கடந்து 54 ஓட்டங்களை பெற்று சிறந்த ஆரம்பம் கொடுக்க, பின்னர் வந்த ஜகோப் பெத்தல் பொறுப்புடன் 55 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழக்க, மத்திய வரிசையில் வந்த அணித் தலைவரான லிவிங்ஸ்டன் பொறுப்புடன் அதிரடி கலந்த ஆட்டத்தினை வெளிப்படுத்தி சதம் கடந்து ஆட்ட மிழக்காமல் 85 பந்துகளில் 124 ஓட்டங்களை விளாசிக் கொடுக்க, சாம் கரன் தன் பங்கிற்கு 52 ஓட்டங்களை பெற்றுக் கொடுக்க இங்கிலாந்து அணி 47.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 329 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட்டுக்களால் இலகு வெற்றி பெற்றதுடன் தொடரின் ஒரு போட்டி மீதமிருக்க தொடரை 1:1 என சமன் செய்தது.





# அஜாஸ் படேலின் சுழலில் சிக்கிய இந்தியா,

## முதல் முறையாக இந்தியாவிற்கு வெள்ளையடித்த நியூசிலாந்து

இந்திய அணிக்கு எதிரான 3ஆவதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அஜாஸ் படேலின் சுழலில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறிப் போக 25 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி 3 :0 என முதன் முறையாக இந்திய மண்ணில் வைத்து இந்திய அணிக்கு வெள்ளையடிப்புச் செய்து கைப்பற்றியது.

சுற்றுலா நியூசிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணியுடன் பலப்பரீட்சை நடாத்த இந்தியா வந்திருந்தது.

அதற்கமைய முதல் இரு போட்டிகளிலும் வெற்றி பெற்று ஒரு போட்டி மீதமிருக்க தொடரை 2:0 என கைப்பற்றியிருந்தது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவதும் இறுதியுமான போட்டி மும்பை வெங்கடே மைதானத்தில் ஆரம்பித்தது.



இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதற்கமைய மிச்சேல் 82 ஓட்டங்களையும், யங் 71 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க சகல விக்கட்டுக் களையும் இழந்த நியூசிலாந்து அணி 235 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் ஜடேஜா 5 விக்கெட்டுகளையும், வாசிங்டன் சுந்தர் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு கில் 90 மற்றும் ரிஷப் பாண்ட் 60 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற இந்திய அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 263 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்துவீச்சில் அஜாஷ் படேல் 5 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

பின்னர் 28 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் பின்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணிக்கு மத்திய வரிசை வீரர்களான யங் 51 ஓட்டங்களையும், பிலிப்ஸ் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க நியூசிலாந்து அணி 174 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது. பந்துவீச்சில் முதல் இன்னிங்ஸில் சுழலில் சாதித்த ஜடேஜா 5 விக்கெட்டுக்களை அள்ளிக் சுருட்டினார்.

தொடர்ந்து நியூசிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 147 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணிக்கு எந்த துடுப்பாட்ட வீரர்களும், பொறுப்புடன் நிலைத்திருந்து ஆடத் தவற மத்திய வரிசை வீரரான ரிஷப் பாண்ட் மாத்திரம் அதிரடியாக 64 ஓட்டங்களை விளாசிக் கொடுத்த போதிலும் இந்திய அணியால் சகல விக்கட்டுக் களையும் இழந்து 121 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 25 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்று தொடரை 3:0 என வெள்ளையடித்துக் கைப்பற்றியது.

பந்துவீச்சில் அஜாஸ் படேல் 6 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார் .

மேலும் இந்திய அணிக்கு எதிராக இந்திய மண்ணில் வைத்து டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி 3:0 என வெள்ளையடிப்புக் செய்தமை இதுவே முதல்முறையாகும். அத்துடன் இந்திய அணி 1999 ஆம் ஆண்டுக்கு பின்னர் முதன் முறையாக இந்தியாவில் வைத்து டெஸ்ட் தொடரின் 3:0 என இந்திய அணி வெள்ளையடி வாங்கி தோற்றமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.